# வாழ்க்கையை வளமாக்கும் வார்த்தைகள்

[அப்படி என்ன இந்த புத்தகத்தில் இருக்கு?
படித்து பாருங்க புரியும்]

எஸ். தாயப்பன்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

# 'வாழ்க்கையை வளப்படுத்தும் வார்த்தைகள்'

(அப்படி என்னதான் இருக்கு
இந்தப் புத்தகங்களிலே?
படிச்சுப் பாருங்க. புரியும்!)

எஸ்.தாயப்பன்

நன்கொடை - ரூ.5/-

*Tamil & Hindu Books available with*

1. **Holy Fire Missions in Christ**
   PO Box 10, Chennai - 600 045.
   Cell: 91 - 9380101097 / 9791091157

2. **Holy Fire Missions in Christ**
   Deepak Masih
   No.8, D.S. Nagar, M.S.I. Post
   Kalyanpur, Kanpur - 208016
   Uttarpradesh.

3. **S.Thayappan**
   12, G.D. Naidu Street, Balaji Avenue
   Chitlapakkam Main Road
   Selaiyur P.O., Chennai - 600 073.
   Tele: 044 - 43552899

# என்னுரை

2001ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னையும் என் முழுக் குடும்பத்தையும் அதிசயங்கள், அற்புதத்தின் மூலமாக தெரிந்து கொண்டார். எங்களைக் கர்த்தர் தெரிந்து கொண்ட விதத்தைப் பற்றிய சாட்சியான 'என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்' என்கிற நூல் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பல லட்ச மக்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்த பேருதவியாக இருக்கிறது என அநேகர் கூறுகின்றனர். கிரிடிட் எனக்கு இல்லை. எல்லாப் புகழும், கீர்த்தியும், மகிமையும் கிறிஸ்து ஒருவருக்கு மட்டுமே உரியது. நான் அவர் பயன்படுத்தும் ஒரு மிக மிக சாதாரணமான ஒரு துரும்பு, குப்பை, களிமண்.

2005ல் கர்த்தர் என்னை ஊழியத்துக்கு அழைத்தார். இதுவரை 51 புத்தகங்கள், 5 விசிடி, இரண்டு டிவிடி வெளியிட தேவன் கிருபை தந்துள்ளார். என்னுடைய புத்தகங்கள், சீடிக்கள் அனைத்தும் பத்து ரூபாய் மட்டுமே. 5 ரூபாய்க்கும், 2.50 ரூபாய்க்கும் கூட சின்ன நூல்கள் வெளியிட தேவன் கிருபை பாராட்டினார். இந்தப் புத்தகங்களை படித்த அனைவருமே சுவிசேஷத்தை அறிவிக்க இந்த புத்தகங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என பண்டில் பண்டிலாக இப்புத்தகங்களை வாங்கிச் செல்கின்றனர். இந்தப் புத்தகங்களைப் பற்றி இன்னும் அறியாத ஜனங்களும் இருக்கிறார்கள். இந்தப் புத்தகங்களில் என்ன எழுதியிருக்கிறது என்று அறிந்தால் மட்டுமே யாரும் இவைகளை வாங்குவார்கள் இல்லையா? பிரசங்க நேரத்தில் இதற்காக நான் அதிக நேரம் செலவழிக்க முடியாது. ஆகவே இப்புத்தகங்களில் என்ன இருக்கிறது என எழுதி அதை நீங்கள் ஒரு சிறிய புத்தகமாக வெளியிட்டால் புத்தகங்களை வாங்குவதற்கு அது மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என சில நண்பர்கள் கூறினர். நல்ல

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | | On Sale | Rs |
|---|---|---|---|
| 1. | என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழ்) | 3,25,000 | 10/- |
| 2. | என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (கன்னடம்) | 60,000 | 10/- |
| 3. | என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (மலையாளம்) | 40,000 | 10/- |
| 4. | என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தெலுங்கு) | 10,000 | 10/- |
| 5. | என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஹிந்தி) | 10,000 | 10/- |
| 6. | என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (ஒடிசா) | 6,000 | 10/- |
| 7. | My Cry & Joyful Life (English) | 75,000 | 10/- |
| 8. | சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள் | 1,10,000 | 10/- |
| 9. | பாவத்தின் சம்பளம் நரகம் (தமிழ், கன்னடம்) | 1,00,000 | 10/- |
| 10. | இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார் | 50,000 | 10/- |
| 11. | என் ஊழியக்காரனே? | 20,000 | 10/- |
| 12. | என் ஊழியக்காரனே? | 20,000 | 10/- |
| 13. | இந்தியாவுக்கு இயேசு தேவை, ஏன்? | 40,000 | 10/- |
| 14. | சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே! | 30,000 | 10/- |
| 15. | நீங்களே எனக்கு சாட்சிகள் | 16,000 | 10/- |
| 16. | உண்மையான கடவுள் யார்? | 20,000 | 10/- |
| 17. | அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு | 20,000 | 10/- |
| 18 | இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை? | 10,000 | 10/- |
| 19. | கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் 1) | 15,000 | 10/- |
| 20. | கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் 2) | 15,000 | 10/- |
| 21. | நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் (பாகம் 1) | 20,000 | 10/- |
| 22. | நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் (பாகம் 2) | 20,000 | 10/- |
| 23. | கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு (தமிழ், கன்னடம்) | 10,000/- | 10/- |
| 24. | திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி - டாக்டர் கிறிஸ்டோபர் | 15,000 | 10/- |
| 25. | இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - டாக்டர் சுந்தர் ஏசுவடியான் | 10,000 | 10/- |
| 26. | பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 1) | 6,000 | 10/- |
| 27. | பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 2) | 6,000 | 10/- |
| 28. | பரலோகம் செல்ல எளிதான வழி (சுவிசேஷத்தை அறிவிக்கும் முறை) | 5,000 | 10/- |
| 29. | அரிய வேதம் அறிய வேண்டிய வேதம் | 10,000 | 10/- |
| 30. | இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து (பாகம் 1) | 10,000 | 10/- |
| 31. | இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து (பாகம் 2) | 10,000 | 10/- |
| 32. | விவிலியமும் விஞ்ஞானமும் | 10,000 | 10/- |
| 33. | கிறிஸ்துவத்தைக் குறித்து இந்துக்களின் பொதுவான கேள்வியும், அதற்குரிய பதிலும் (பாகம் 1) | 10,000 | 10/- |
| 34. | கிறிஸ்துவத்தைக் குறித்து இந்துக்களின் பொதுவான கேள்வியும், அதற்குரிய பதிலும் (பாகம் 2) | 10,000 | 10/- |
| 35. | ஜெகோவா விட்னஸின் உபதேசமும் அதற்கு பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 1) | 5,000 | 10/- |
| 36. | ஜெகோவா விட்னஸின் உபதேசமும் அதற்கு பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 2) | 5,000 | 10/- |
| 37. | ஜெகோவா விட்னஸின் உபதேசமும் அதற்கு பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 3) | 5,000 | 10/- |
| 38. | ஜெகோவா சாட்சிக்கு சத்தியத்தை அறிவிப்பது எப்படி (பாகம் 1) | 5,000 | 10/- |
| 39. | ஜெகோவா சாட்சிக்கு சத்தியத்தை அறிவிப்பது எப்படி (பாகம் 2) | 5,000 | 10/- |
| 40. | நிறைவேறிய தீர்க்க தரிசனங்கள் (பாகம் 3) | 5,000 | 10/- |

| | | |
|---|---|---|
| 41. சிலை வணக்கம் சின்னாபின்னப்படுத்தியதே | 5,000 | 10/- |
| 42. கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு | 5,000 | 10/- |
| 43. தெய்வீக சுகம் உண்டா? | 10,000 | 10/- |
| 44. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை | 10,000 | 10/- |
| 45. VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (தமிழ்) | 3,40,000 | 10/- |
| 46. VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (கன்னடம்) | 60,000 | 10/- |
| 47. VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (ஹிந்தி) | 30,000 | 10/- |
| 48. VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (மலையாளம்) | 10,000 | 10/- |
| 49. VCD எழுந்து காட்டுவோம் (தமிழ்) | 20,000 | 10/- |
| 50. VCD முக்திக்கு வழி கிறிஸ்தவமே (தமிழ்) | 15,000 | 10/- |
| 51. VCD கதாகாலட்சேபம் (தமிழ்) | 15,000 | 10/- |
| 52. VCD தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே | 10,000 | 10/- |
| 53. நாலு வேதங்களின் நாயகர் இயேசு | 5,000 | 5/- |
| 54. ஓர் அவசர அறைகூவல் | 10,000 | 5/- |
| 55. கர்நாடகாவிற்காக கதறி அழும் கல்வாரிய ஐக்கிய ஜெபக்குழுவும் இராணுவ சகோதரர்களும் (தமிழ், கன்னடம்) | 5,000 | 5/- |
| 56. ஆரோக்கிய வாழ்வுக்கு ஒரு தெய்வீக அழைப்பு | 5,000 | 5/- |
| 57. திரித்துவம் - பாஸ்டர் சாலமோன் ராஜா | 5,000 | 5/- |
| 58. இஸ்லாமியர்களின் கேள்விகளுக்குப் பதில் | | 5/- |
| 59. இந்திய ஊழிய உயர்வுக்கு ஒரு புதிய பார்வை | 20,000 | 5/- |
| 60. ஆனந்த புதுவாழ்வு கண்டேன் | 20,000 | 5/- |
| 61. இயேசு உன்னோடு பேசுகிறார் | 15,000 | 5/- |
| 62. நித்யஜீவன் தரும் நிகரில்லா இயேசு | | 5/- |
| 63. இது உங்கள் உயிர் காக்கும் முயற்சி | 10,000 | 2.50 |
| 64. தமிழ்நாட்டில் உள்ள வட இந்தியர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க ஒரு உன்னத அழைப்பு | 5,000 | 2.50 |
| 65. DVD ஆனந்த புதுவாழ்வு கண்டேன் (Telefilm) | 5,000 | 2.50 |
| 66. DVD அமாவாசை (Telefilm) | | 100 |

---


இந்த நூல்கள் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி

**எஸ்.தாயப்பன்**

12, ஜி.டி.நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ-1,
சேலையூர் போஸ்ட், சென்னை - 600 073.

தொலைபேசி: 044 - 22234256, மின்னஞ்சல்: sakthiprabha@yahoo.com


**நூலை அனுப்ப சில விதிகள்:**

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ.1. M.O., D.D அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை MO பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. MO, DD பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

**விசிடி அனுப்ப தபால் செலவு மட்டும்: கொரியரில் அனுப்ப (தமிழ்நாட்டிற்குள்)**

1 முதல் 15 விசிடி அனுப்ப ரூ.50/-. 16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ.60/-

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

# 'வாழ்க்கையை வளப்படுத்தும் வார்த்தைகள்'

## சேப்டர் - 1
## இந்துக்களுக்குரிய புத்தகங்கள்

### 1. ஆனந்த புதுவாழ்வு

58 வயது வரை தீவிர பக்தி வைராக்கியமுள்ள ஒரு வாழ்க்கை. செவ்வாய், வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி நாட்களெல்லாம் செவ்வாடையில்தான் இருப்போம். கலச, விளக்கு வேள்வி, பூஜைகள் என்று இருந்த ஒரு பக்தியுள்ள குடும்பம். 15 ஆண்டுகள் இருமுடி கட்டி மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயிலுக்குச் செல்வோம். 26 ஆண்டுகள் வருஷம் தவறாமல் திருச்செந்தூர் யாத்திரை. மூத்த மகன் கார்த்திக் B.E. முடித்து அமெரிக்காவில் ஒரு பெரிய கம்பெனியில் வேலை. மாதம் 2.5 லட்சம் சம்பளம். மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அமைதியாக, ஆனந்தத்துடன் பல கனவுகள், கோட்டை களுடன் சென்று கொண்டிருந்த வாழ்க்கையில் ஒரு பெரிய இடி, புயல். ஒரு அமெரிக்க ஆஸ்பத்திரியில் இருந்து ஒரு போன். மூத்த மகன் கார்த்திக்கிற்கு மூளையில் டி.பி.நோய். உடனே தலையில் ஒரு மேஜர் ஆபரேஷன் செய்தாகணும் என்கின்ற ஒரு நிலை. அமெரிக்காவில் அருமை மகன் கோமா ஸ்டேஜில். என்ன செய்வது என்று ஒன்றும் புரியாமல் இந்தியாவில் இங்கு கலங்கித் தவிக்கும் குடும்பம். மறு வாரமே இன்னொரு போன்கால். முதல் தடவை செய்த ஆபரேஷன் வெற்றிகரமாக இல்லை. மீண்டும் தலையில் ஒரு மேஜர் ஆபரேஷன் செய்தாக வேண்டும். இல்லையேல் உயிருக்கே ஆபத்து. குடும்பம் நிலைகுலைந்து போனது.

நான் தனியாக அமெரிக்கா பயணப்படுகிறேன், மகனைக் காண. தந்தை வந்தது கூட தெரியாத நிலையில் - கோமா

நிலையில் மகன். விதி விளையாடுகிறது. ஜோசியர்கள் அவ்வளவுதான் என்று கைவிரிக்கின்றனர். நாளுக்கு நாள் மகனின் நிலைமை மோசமாகிக் கொண்டே போகிறது. ஒன்றல்ல, இரண்டல்ல தொடர்ச்சியாக 13 ஆபரேஷன்கள். கடைசியில் அமெரிக்கன் மருத்துவர்கள் கைவிட்டு கருணைக் கொலை செய்து விடுங்கள் என்று பரிந்துரைக்கும் நிலை. மரணத்தின் கடைசி விளிம்பில் தொங்கிக் கொண்டு இருக்கும் நிலைமையை இந்தியாவில் உள்ள குடும்பத்திற்குச் சொல்லவும் முடியாத ஒரு நிலைமை. கண்ணீர் விட்டு கதறுகிறேன். ஏன்.. ஏன்... இந்த நிலை? இதுவரை கும்பிட்ட தெய்வங்கள் ஏன் மகனைக் கைவிட்டன? குழம்பித் தவிக்கிறேன்.

அமெரிக்கன் மருத்துவர்கள் கைவிட்டு கருணைக் கொலை செய்து விடுங்கள் என்று கூறப்பட்ட மகன் பிழைத்தானா? மருத்துவச் செலவுக்கு என்ன செய்தனர்? கலங்கித் தவித்த குடும்பத்தின் கண்ணீர் துடைக்கப்பட்டதா? மெய்சிலிர்க்க வைக்கும் சம்பவங்கள் நிறைந்த வாழ்க்கை வரலாறு. '**என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும்**' என்ற பெயரில் புத்தகமாக தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஒடிசா மொழிகளில் வந்துள்ளது. VCDயாக தமிழ், இந்தி, கன்னடம், மலையாளத்தில் இருக்கிறது. எல்லாம் ரூ.10 மட்டுமே. 'ஆனந்த புதுவாழ்வு' என்று ரூ.5க்கும் கிடைக்கிறது. 'ஆனந்த புதுவாழ்வு' என்று டெலி ஃபிலிமாக தமிழ், தெலுங்கு, ஆங்கில sub titling-கோடு வெளிவந்துள்ளது. வாங்கிப் படித்துப் பாருங்கள். உங்கள் வாழ்க்கையின் துன்பமெல்லாம் ஒன்றுமே இல்லை என்று உணர்வீர்கள். உங்களை பலப்படுத்தும் ஒரு நூல் இது.

## 2. மெய்ப்பொருள் எது? யார்?

இறைவன் என்று ஒருவர் இருக்கிறாரா? அவர் ஒருவரா? முப்பத்தி முக்கோடி தேவர்களா? அவர் பெயர் என்ன? அவர் இந்துக் கடவுளா? கிறிஸ்தவத்தை சேர்ந்தவரா? அல்லது இஸ்லாமியர்கள் வழிபடும் அல்லாவா? நபியா? நமது கோவில்களில் தெய்வம் என்று கும்பிடப்படுகிறவர்கள் உண்மையிலேயே தெய்வமா? கடவுள் மனிதனைப் படைத்தாரா? மனிதன் கடவுளைப் படைத்தானா? கடவுளை

யாராவது பார்த்து இருக்கிறார்களா? இறைவன் கோவில்களில் இருப்பது போன்ற தோற்றத்தில்தான் இருக்கிறாரா? இறைவனுக்கு மனைவி, பிள்ளைகள் இருக்கிறார்களா? இறைவன் 4 அறிவு, 5 அறிவு படைத்த மிருகங்களின் உருவில் வெளிப்படுவாரா? இதுகுறித்து சித்தர்கள், ஞானிகள் என்ன கூறியிருக்கின்றனர். உண்மையான பரம்பொருள் யார்? என்கிற கேள்விகளுக்கு விடை காண **'சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்', 'உண்மையான கடவுள் யார்?'** என்கிற நூல்களைப் படியுங்கள். விக்கிரஹங்களை கும்பிடலாமா? இதுகுறித்து இந்துமத வேதங்கள் என்ன கூறுகின்றன என்பதை இந்த இரண்டு நூல்களில் காணலாம்.

## 3. வேதங்கள் கூறும் உண்மை

தேவாரம், திருவாசகம், நாலாயிரம் திவ்யப் பிரபந்தம், போற்றிப் பஃறொடை, சைவ சித்தாந்த நூல்களுக்கு அடிப்படை நூலாக இருக்கிற மெய்கண்டார் எழுதிய சிவஞான போதம், வேத வியாசர் எழுதிய பிரம்ம சூத்திரம், திருமூலர் எழுதிய திருமந்திரம், இவைகளில் சொல்லப்பட்டுள்ள தெய்வம் யார்? ரிக் வேதத்தினுடைய இரண்டாம் பகுதியாகிய புருஷ சூக்தத்தில் பலியாக்கப்பட்ட புருஷர் யார்? சைவக் குறவர்கள், சைவ சித்தாந்த ஞானிகள், பக்த சிரோன்மணிகள், வைணவப் பெரியார்கள், ஆழ்வார்கள் போற்றுகின்ற தெய்வம் எது என்பதை தமிழ் பாடல்கள், சமஸ்கிருத ஸ்லோகங்கள் மூலமாக **'இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து'** என்று இரண்டு பாகங்களாக எழுதப்பட்டுள்ள அருமையான நூல்கள். மேற்கண்ட நூல்கள் அனைத்திலும் கூறப்பட்டுள்ள தெய்வம் இயேசுவே என்று ஐயந்திரிபுர தெளிவாக எழுதப்பட்டுள்ளதைக் காணலாம்.

## 4. திருக்குறள் கூறும் தெய்வம்

திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களும் எதன் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளன? அவைகளின் உட்கருத்து என்ன? குறள் சுட்டிக் காட்டும் மெய் தெய்வம் எது? என்பதை ஆதாரபூர்வமாக விளக்கங்கள் கூறி எழுதப்பட்டுள்ள நூல். **'திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தியும், சான்றோரின் நற்பண்புகளும்'.**

### 5. நாலு வேதங்களின் நாயகர்

இந்து மதத்திற்கு அடித்தளம் நான்கு வேதங்கள் என்று கூறுவார்கள். ரிக், சாம, யஜுர், அதர்வண வேதங்களில் என்ன எழுதப்பட்டு இருக்கின்றது? இவைகளை எழுதியவர்கள் யார்? இவைகள் எழுதப்பட்ட காலம் என்ன? இந்த வேதங்களில் சொல்லப்பட்டு இருக்கும் தெய்வம் யார்? வியக்க வைக்கும் விளக்கங்களுடன் உள்ள **'நாலு வேதங்களின் நாயகன் இயேசுவே'** என்கிற நூலைப் படியுங்கள். வேதங்கள் போற்றும் நாதநாயகனை தெரிந்து கொள்ளுங்கள்.

### 6. மெய் தெய்வம் குறித்த கேள்விகளுக்கு பதில்

மனிதர்களில் 90% த்திற்கும் அதிகமானவர்களுக்கு தெய்வ பக்தி, தெய்வ பயம் இருக்கிறது. ஆனால் ஒரு தெளிவு இல்லை. பல கேள்விகள், குழப்பங்கள் நம் உள்ளத்தில் இருக்கின்றது. நமது பெற்றோர்கள் எந்த மதத்தைச் சேர்ந்திருக்கிறார்களோ அதையே நாமும் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுகிறோம். நம் மதத்தில் உள்ள அனைத்து வேதங்களையும், மற்ற மதங்களின் வேதங்களையும் படித்து, அலசி ஆராய்ந்து பார்த்து விட்டு யாரும் ஒரு மதத்தைப் பின்பற்றுவது இல்லை. இதில் இயேசு கிறிஸ்துதான் மெய்யான தேவன் என்று கிறிஸ்தவர்கள் கூறுகின்றனர். அல்லாவே மெய்யான இறைவன் என்று இஸ்லாமியர்கள் கூறுகின்றனர். நாமோ எங்கும் எதிலும் இறைவன் இருக்கிறார் என்று எண்ணுகிறோம். எல்லா மதமும் கூறுவது இறுதியில் அந்த மெய்ப்பொருளையே சென்று அடைகிறது. நதிகள் பலவாக இருந்தாலும் சென்று சேரும் இடம் ஒன்றுதான் என எண்ணுகிறோம். அது சரியா? உள்ளத்தில் எழும் 102 கேள்விகளுக்குப் பதில் **"கிறிஸ்தவத்தைக் குறித்து இந்துக்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில்"** இரண்டு பாகமாக உள்ளது. படித்து தெளிவு பெறுங்கள்.

### 7. சைவம், வைணவம் எதைப் பிரதிபலிக்கிறது?

இந்து மதத்தின் மேஜர் பிரிவுகளாகக் கருதப்படும் சைவமும், வைணவமும் எதன் அடிப்படையில், எப்போது உருவாயிற்று? அவைகளின் மூலம், அடித்தளம் எது? இந்த இரு சமயங்களும்

சுட்டிக் காட்டும் தெய்வம் எது? இந்து மதம் என்கிற பெயர் எப்படி வந்தது? கிறிஸ்தவத்திற்கும் இந்து சமயத்திற்கும் என்ன சம்பந்தம்? கிறிஸ்தவம் எப்போது நமது தேசத்துக்கு யாரால் எப்படி வந்தது? கிறிஸ்தவத்தால் நமது தேசத்து மதங்களில் என்ன என்ன மாற்றங்கள் நிகழ்ந்தன? நாம் கும்பிடும் தெய்வங்கள் வேறு எந்த மதத்தின் தெய்வங்களையாவது பிரதிபலிக்கிறதா? நமது மதத்தின் கலாச்சாரம், சடங்காச்சாரங்கள், வழிபாட்டு முறைகள், நமது ஆலயங்கள், அவைகளின் ஆகம விதிகள், கோயில் கட்டமைப்புக்கள் இவைகளுக்கு ஆதாரம் எங்கே இருக்கிறது? இவைகள் குறித்து சமய வரலாற்று ஆசிரியர்கள் என்ன கூறுகிறார்கள் என்று நம்மை திகைக்க வைக்கும் பல ஒப்பீட்டு ஆதாரங்களை மற்றும் ஆராய்ச்சி உண்மைகளோடு வெளிவந்துள்ள நூல் **'சைவமும், வைணவமும், கிறிஸ்தவமும்'**. இது VCDயாகவும் வெளிவந்துள்ளது. பல்வேறு மதங்களின் ஒப்பீடு குறித்து நாகர்கோயில் ஹெவன் டி.வி.யில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில் **'முக்திக்கு வழி கிறிஸ்தவமே'** என்று ஒரு VCDயாகவும் வெளிவந்துள்ளது. பாருங்கள், படியுங்கள், பயன் பெறுங்கள்.

## 8. அறிந்து கொள்ள வேண்டிய சத்தியங்கள்

உலகில் உள்ள ஒவ்வொரு மதத்திற்கும், அந்தந்த மதத்திற்குரிய வேதங்கள், வேதாந்தங்கள், உபநிஷத்துக்கள், பிரமாணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள், புராணங்கள் என்று பல இருப்பதை நாம் அறிவோம். இவைகளில் பல மனித கற்பனையில் உருவானவைகள். பல காலம் தவமிருந்து பெற்ற ஞானத்தை, தெளிவை, சித்தாந்தங்களை அவர்கள் அறிந்த வகையில் ஞானிகள், தவசிகள், வேத விற்பன்னர்கள் எழுதியவைகள் சில. வேதங்களின் நோக்கமே மனிதர்களை பண்படுத்துவதும், பக்குவப்படுத்துவதும், பரிசுத்தப் படுத்துவதும், நடக்க வேண்டிய வழிகளைப் போதிக்கவுமே, பொதுவாக அந்த மதத்திற்குரிய வேதத்தை அந்த மதத்தை சார்ந்தவர்கள் மட்டுமே படிப்பார்கள். மற்ற மதத்தார், நம்பிக்கையுள்ளோர் மற்றவர்களின் வேதங்களை படிப்பது என்பது மிகவும் அரிது.

பொதுவாக அந்த மதத்திற்குரிய வேதங்கள் அவர்களின் தாய்மொழியில் மட்டுமே இருக்கும். ஒரு சில வேதங்கள் மற்றும் ஒரு சில மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு இருக்கலாம். ஆனால் இன்று உலகில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பல லட்சம் கோடிகள் பிரிண்ட் ஆகி புழக்கத்தில், பயன்பாட்டில் உள்ள ஒரு அரிய நூல் என்று பைபிளைக் குறித்து சொல்லப்படுகிறது. உண்மையில் இந்த பைபிளை எழுதியது யார்? பைபிளில் சொல்லப் பட்டுள்ளவை கள் அனைத்தும் உண்மையா? அவைகள் நிரூபிக்கப்பட்டுள் ளதா? கிறிஸ்தவத்தை சாராதவர்களும் பைபிளைப் போற்றும் அளவுக்கு அதில் என்ன இருக்கிறது? பைபிளின் சிறப்பு, மகிமை, கருத்து என்ன என்று தெரிந்து கொள்ள **'அரிய வேதம், அறிய வேண்டிய வேதம்'** என்கிற நூலைப் படித்துப் பாருங்கள். பைபிள் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே உரிய ஒரு நீதி நூல் அல்ல. இந்த உலகில் மனிதனாகப் பிறந்த அனைவருமே படித்து, வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளைக் கூறும் ஒரு அற நூல் பைபிள் என்பதை விளக்கும் ஒரு நூல் இந்தப் புத்தகம்.

## 9. விஞ்ஞானத்திற்கும் வேதத்திற்கும் உள்ள பிணைப்பு

இந்தப் பிரபஞ்சம், பல கோடி நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன், கோள்கள், கிரகங்கள், ஜீவராசிகள், மனிதர்கள் இவைகள் எல்லாம் எப்படித் தோன்றின? இதைக் குறித்து எந்த வேதம் ஆதாரப்பூர்வமாக எடுத்துக் காட்டுகிறது? இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் அனைத்துமே நம்மை அசர வைப்பவைகள். இந்த கண்டுபிடிப்புகளுக்கு ஆதாரம் எங்கே இருக்கிறது? என்று தேடிப் பார்த்த அறிஞர்கள் பலர் இவை அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பது பைபிளே என்று கூறியிருக்கின்றனர். அவர்கள் அப்படி கூறுவதற்கு ஆதாரம், காரணம் என்ன? பல நாட்டு அரசியல் சட்டங்களுக்கு ஆதாரம், சோசியலிசம், கம்யூனிசம், டெமாக்கிரசி போன்ற பல அரசியல் சித்தாந்தங்களுக்கு மூலமாக அடிப்படையாக இருப்பதுவும் பைபிளே என்று ஆதாரப்பூர்வமாக நிரூபித்துக் காட்டும் நூல் **'விவிலியமும் விஞ்ஞானமும்'** என்ற நூல். உங்களை அசர வைக்கும் ஆதாரங்களைத் தரும் அருமையான நூல். வாங்கி படித்துப் பயன்பெறுங்கள்.

## 11. வேதம் பொய் இல்லை

பைபிளில் சொல்லப்பட்டு இருக்கிற அனைத்தும் நடந்திருக்கிறதா? நடந்திருந்தால் அதற்கு ஆதாரம் என்ன? இவைகள் நடப்பதற்கு முன்பே எழுதப்பட்டவைகளா? பின்னால் எழுதப்பட்டவைகளா? முன்பே எழுதப்பட்டவைகள் என்றால் எப்போது யாரால் கூறப்பட்டவைகள்? சொல்லப்பட்ட அனைத்துமே நடந்திருக்கிறதா இல்லை என்றால் அவைகளில் ஒரு சிலவைகள் மாத்திரமே நடந்திருக்கின்றனவா? என்பது போன்ற பல கேள்விகளுக்கு பதில் தரும் விதமாக பைபிளில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையுமே அப்படியே வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தை ஒரு தீர்க்கதரிசனப் புத்தகம் என்றே கூறலாம். அதில் நாடுகளைப் பற்றி, நகரங்களைக் குறித்து, சாம்ராஜ்யங்கள், மன்னர்கள், இனம், இனத்தின் அழிவு, படையெடுப்பு, வெற்றி, தோல்வி, கொலை, கொள்ளை என்று அனைத்தைப் பற்றியும் பூடகமாக தேவன் தமது தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்திருக்கிறார். அவைகள் எல்லாமுமே அட்சரம் பிசகாமல் அப்படியே வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறி யிருக்கிறது என்பதை ஆதாரப்பூர்வமாக ஹிஸ்டாரிக்கல் எவிடென்ஸ்களோடு மூன்று பாகங்களாக **'நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்'** என்று எழுதப்பட்டுள்ளது. இன்னும் சில பாகங்கள் எழுதலாம். நேரம் வாய்க்கும்போது எழுத தேவன் கிருபை தருவாராக. சத்திய வேதத்தில் சொல்லப்பட்ட எதுவுமே மனித கற்பனையில் எழுதப்பட்டவைகள் அல்ல. அனைத்தும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டுள்ளது. மலைகள் பெயர்ந்து போகலாம். சமுத்திரம் வற்றி விடலாம். ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒரு வார்த்தை கூட மாறாது என்பதை நிரூபித்துக் காட்டும் ஒரு நூல் இது.

## 11. வெற்றியை நல்கும் வேத சத்தியம்

வார்த்தைகளுக்கு வல்லமை உண்டு. உன் வாயின் வார்த்தைகளினாலே நீ நீதிமான் என்றும் குற்றவாளி என்றும் தீர்க்கப்படுவாய். ஜீவனும் மரணமும் உன் வாயின் வார்த்தைகளிலே இருக்கிறது என வேதம் கூறுகிறது. இவைகள் எல்லாம் மனிதனின் வார்த்தைகளுக்குள்ள மகத்துவம்.

மனிதனுடைய வார்த்தைகளே ஒருவனுடைய ஜீவனையும், மரணத்தையும் நிர்ணயிக்கும் என்றால் தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு வல்லமை இருக்கும். 'வாக்யோ பிரம்மா' என்று நம் இந்துமத வேதம் கூறுகிறது. வார்த்தையே பிரம்மம். பிரம்மன் என்றால் சிருஷ்டி கர்த்தா என்று அர்த்தம். அதைத்தான் சத்திய வேதமும் கூறுகிறது. 'ஆதியிலே வார்த்தை இருந்தது. அது தேவனோடு இருந்தது. அது தேவனாகவே இருந்தது' என்று. அப்படி வார்த்தையாக இருந்தது இயேசு கிறிஸ்துவே. தேவன் வார்த்தையால் இந்த பிரபஞ்சத்தையும் சகல ஜீவராசிகளையும், மனிதர்களையும் படைத்தார் என்றும் அந்த வார்த்தையே மாம்சமாகி மனித அவதாரம் எடுத்து வந்தது என்றும் வேதம் கூறுகிறது. இயேசு வார்த்தையினால் தீராத நோய்களையும் குணப்படுத்தினார். இறந்தவர்களை உயிர்ப்பித்தார். கடலையும், காற்றையும் அடக்கி அமைதிப் படுத்தினார். பிசாசுகள் அலறி அடித்துக் கொண்டு ஓடின. வார்த்தையினால் இயேசு செய்யாத அற்புதங்கள் இல்லை. வார்த்தையாக இருந்த அந்த இயேசுவை பற்றிப் பிடித்துக் கொள்ளும்போது, அவரின் வார்த்தைக்கு செவி கொடுத்து, அவைகளைத் தியானித்து, அவைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவைகளைக் கைக்கொண்டு நம் வாழ்க்கையில் நடக்கும் போது நாம் எப்பேர்ப்பட்ட கஷ்டங்கள், துன்பம், துயரம், கடன் தொல்லைகள், வறுமை மற்றும் பிரச்சினைகளில், தீராத நோய்கள், செய்வினைக் கட்டுகளில் இருந்தாலும் சரி, அவைகள் எல்லாவற்றிலும் இருந்து ஒரு பரிபூரண விடுதலையை, சுகத்தை, சந்தோஷத்தை, சமாதானத்தை அந்த வார்த்தைகள் அளிக்கும். உங்கள் துக்கம் மாறும், வறுமை மாறும், தோல்விகள் மாறும். உங்களை வெற்றி வீரர்களாக ஆக்கும் என்பதை 'சத்தியமே வெல்லும்' என்கிற நூல் உங்களை மேம்படுத்தும், உற்சாகமூட்டும், நம்பிக்கை தரும். படித்துப் பயன்பெறுங்கள்.

## 12. மனித வாழ்வில் ஏன் துன்பம், நோய், வறுமை, எல்லாம்?

பாவம் என்றால் என்ன? மனிதர்களுடைய பார்வையில் எதெல்லாம் பாவமாக எண்ணப்படுகிறது? இறைவனுடைய பார்வையில் எதெல்லாம் பாவமாக தென்படுகிறது? மனித

வாழ்க்கையில் எத்தனையோ துன்பம், துயரம், கஷ்டங்கள், நோய் நொடிகள், சந்தோஷமில்லை, சமாதானமில்லை, இறைவன் மனிதனை இப்படி கஷ்டப்படுத்துவதற்காகவா படைத்தார்? ஏன் இத்தனை பாடுகள்? இவைகள் எதனால் வருகின்றன? செய்யும் பாவங்கள் நம் வாழ்வை எந்த விதத்தில் பாதிக்கும்? நம்மை மட்டும் பாதிக்குமா? இல்லை நம் பிள்ளைகளையும் பாதிக்குமா? ஒரு தலைமுறையையா? பல தலைமுறைகளைப் பாதிக்குமா? பூமியில் மனித வாழ்க்கை 70, 80 ஆண்டுகளே. அதற்குப் பிறகு மறு பிறவி ஏதேனும் இருக்கிறதா? இந்த இம்மை வாழ்வுக்குப் பிறகு நம் ஆவி ஆத்துமா சரீரம் என்ன ஆகிறது? சொர்க்கம் நரகம் என்று இருக்கிறதா? இவைகள் குறித்து மதங்கள், வேதங்கள் என்ன கூறுகின்றன? இவைகளை யாராவது சென்று பார்த்து வந்திருக்கிறார்களா? இவைகள் எப்படி இருக்கும்?

இறைவன் மனிதனை நோய், நொடியில், பலவீனங்களில், வலி, வேதனையில் வாடி வதங்க படைக்கவில்லை. மனிதனை அவர் தன் சாயலிலேயே படைத்தார். தன் ஜீவ சுவாசத்தையே கொடுத்து அவனை ஜீவாத்துமாவாக மாற்றினார். நித்தியத்திற்கும் அவரோடு இருக்க நித்ய ஜீவனையும் கொடுத்தார். ஆனால் மனிதனோ தன் கீழ்ப்படியாமையினால் பாவத்தில் விழுந்து சகலத்தையும் இழந்து போனான். இவ்வுலகில் பாவம் செய்யாத மனுஷனே இல்லை. நாம் நினைக்கிறோம். திருடுனாப் பாவம், கொலை கொள்ளை செஞ்சா பாவம், ஒரு பெண்ணை கற்பழிச்சா பாவம், லஞ்சம் வாங்கினாப் பாவம் என்று... இப்படிப்பட்ட சிலவற்றை மட்டுமே நாம பாவம்னு நினைக்கிறோம்.

ஆனா சத்திய வேதம் கூறுகிறது - ஒரு பெண்ணை மனசால இச்சித்துப் பார்த்தாலே அவளோடு விபச்சாரம் செய்ததா சொல்லுது. பொய் சொன்னா பாவம், யாரைப் பத்தியாவது குறை சொன்னா பாவம், மனசு புண்படும்படியா பேசினா பாவம், கர்வம், வம்பு, வீம்பு, வைராக்கியம், மேட்டிமையான எண்ணம், பொறாமை, காம விகாரம், ஜாதி பார்த்தல், சகுனம் பார்த்தல், குறிகேட்டல், ஜோதிடம் பார்த்தல், போதை மதுபானம் இப்படி எத்தனையோ நாம நினைச்சுக் கூட பாக்காதது எல்லாம், அன்றாடம் நாம் ரொம்ப கேஷுவலா

செய்யுது எல்லாமே இறைவனுடைய பார்வையில் பாவமா படுகிறது. அதனால் இப்படிப்பட்ட பாவங்களை எல்லாம் நம்மைத் தொடர்ந்து செய்ய வச்சு பாவத்தின் சம்பளம் மரணமாகிற நரகத்துக்கு நம்மைத் தயார்படுத்திக்கிட்டு இருக்கிறான்.

அவன் கொல்லவும், திருடவும், அழிக்கவுமே வருகிறான். நாம நீதிமான்களாக, பரிசுத்தவான்களாக, சத்தியவான்களாக, சந்தோஷமா, நிம்மதியா, நோய் நொடி இல்லாம இருக்கிறது அவனுக்குப் பிடிக்காது. 'பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று எல்லா விதமான இச்சைகளையும் என்னில் நடப்பித்தது'. 'இச்சையானது பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்'னு வேதம் கூறுகிறது. இந்த பாவங்கள் நம்மை என்ன செய்யுமாம்? 'நான் விரும்புகிறதைச் செய்யாமல் வெறுக்கிறதையே செய்கிறேன். எனக்குள்ளே இருக்கிற பாவமே அப்படி செய்யத் தூண்டுகிறது.

'உங்கள் பாவங்களே உங்களுக்கு எதிராக சாட்சி சொல்லும்'. பாவம் பெருகி அதன் சுமை சுமக்க முடியாத அளவுக்கு ஆகிற சமயத்தில, அதனால் 'என் எலும்புகளில் சுவுக்கியமில்லை. என் அக்கிரமங்கள் பாரச் சுமை போல என்னால் தாங்கக் கூடாததாக இருக்கிறது' என்று நாம புலம்பற அளவுக்கு நம்மைக் கொண்டு போய் விடும்.

வாழ்க்கையில் சந்தோஷம், சமாதானம் கொஞ்சங்கூட இருக்காது. இந்த பாவங்களை நாம் எத்தனை கோயிலுக்குப் போனாலும் சரி, விரதம் இருந்து, இருமுடி கட்டிக்கிட்டு மேல்மருவத்தூர், ஐயப்பன் கோயில், திருப்பதி, திருவண்ணாமலை, திருச்செந்தூர், வேளாங்கண்ணி என்று போனாலும், எத்தனை அன்னதானம், பாத பூஜை, கோ பூஜை பண்ணினாலும், கங்கை, காசி, ராமேஸ்வரத்தில் குளிச்சாலும் சரி, ராஜயோகா, குண்டலினி யோகா, வெட்டவெளி தியானம், வாசுலை பயிற்சி என்று செஞ்சாலும் சரி இந்த பாவங்களைப் போக்க முடியாது. என்னா இரத்தத்தால செய்த பாவத்தை பாவமே இல்லாத இரத்தம் சிந்தித்தான் போக்க முடியும். அப்போப்பட்ட பாவமில்லா இரத்தம் கடவுள் ஒருத்தர் கிட்ட மாத்திரம்தான் இருக்கு. அதுனால கடவுளே மனித அவதாரம்

எடுத்து வந்து பலியாகி, இரத்தம் சிந்தினாத்தான் பாப விமோசனம் கொடுக்க முடியும்னு சம்பூர்ண மகாபாரதம், தாண்டீய மஹா பிரமாணம், பிரம்ம சூத்திரம், பிருகதாரணி உபநிஷத்து, ரிக் வேதம், புருஷ சூக்தம், சாந்தோக்கிய உபநிஷத்து, சதாதபவசனம், பவிஷ்ய புராணம் எல்லாமே சொல்லுது. ஆனா எந்த தெய்வம் மரிச்சிருக்கு? இயேசு கிறிஸ்துவைத் தவிர வேற எந்த தெய்வமும் இரத்தம் சிந்தலையே. தெய்வம்னு நாம கும்புடுகிற எதுவுமே பாவத்தையும் மன்னிக்கலை. பாவிகளையும் மன்னிக்கலையே. பாவத்தை வெறுத்து பாவிகளை நேசித்த ஒரே தேவன் இயேசு ஒருத்தர்தானே.

சரி இந்த பாவங்கள் போக்கப்படலைன்னா என்ன ஆகும்? பூலோகத்தில் வாழும் நாட்களெல்லாம் துன்பம், துயரம், நோய், கஷ்டம், வறுமை எல்லாமும் இருக்கும். இந்த வாழ்க்கைக்கு பிறகு இருக்கிற மறுமை வாழ்விலும் நாம சொர்க்கம் போகாம, நரகத்தில கிடந்து யுகம் யுகமா அவதிப்படணும். சொர்க்கம், நரகம் இருக்குதா? இது குறிச்சு இந்திய வேதங்கள் என்ன சொல்லுது? நரகம் எப்படி இருக்கும்? என்பன போன்ற பல கேள்விகளுக்கு விடை காண 'பாவத்தின் சம்பளம் நரகம்'ங்கிற புத்தகத்தைப் படியுங்க. சில பரிசுத்தவான்களை ஆண்டவர் சொர்க்கத்துக்கும், நரகத்துக்கும் கூட்டிட்டு போயி காட்டியிருக்கார். படிச்சா தூக்கம் வராது. தப்பு பண்றதுக்கு அடிவயிற்றில் ஒரு பயம் வரும். படிக்கும் எவரையும் ஒரு பரலோக பிரஜையாக மாற்ற வல்ல ஒரு அருமையான நூல் இது. வாங்கி நீங்களும் படிங்க, மத்தவங்களுக்கும் வாங்கிக் கொடுங்க.

## 13. தெய்வம் நோயைக் குணப்படுத்துமா?

நோய், பலவீனங்கள் வர்றதுக்கு காரணமே நம்மோட பாவங்கள்தான். அந்தப் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டால், நோய் குணமாகி விடும். கல்வாரி சிலுவையிலே நம்மோட பாபங்களையும், சாபங்களையும் மாத்திரமல்ல, நம்மோட நோய்களையும் இயேசு சுமந்து தீர்த்து விட்டார். அவர் பட்ட காயங்களால், அவர் தழும்புகளால் நாம் குணமானோம் என்று வேதம் கூறுகிறது. நீ சுமக்கத் தேவையில்லை; விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பாய் என்று வேதம் கூறுகிறது. தீராத

நோய்கள், பலவீனங்களையும், வலி வேதனைகளையும், ஆண்டவர் சிலுவையிலே சுமந்து சுகமாக்கி விட்டார். இதை நாம் விசுவாசிக்க வேண்டும். 'உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது' என்று ஆண்டவரே கூறுகிறார். அசைக்க முடியாத விசுவாசத்தினால் எத்தனையோ பேர் அற்புத சுகத்தை பெற்றுக் கொண்டு இருக்கின்றனர்.

2000 ஆண்டுகளுக்கு முன்பு மாத்திரம் அல்ல, இன்றைய தேதியிலும் டாக்டர்களே கண்டு வியக்கும் வண்ணம் அதிசயங்கள், அற்புதங்கள் நடக்கின்றது. அப்படி பார்வை பெற்ற குருடர்கள் இருக்கின்றனர். கை கால்கள் சூம்பிப் போய் நடக்க முடியாமல் இருந்த பலர், வீல் சேர்களில் இருந்த அநேகர் அற்புத சுகம் பெற்று எழுந்து நடந்துள்ளனர். ஊமைகள் பேசியிருக்கின்றனர். செவிடர்களின் செவிப்புலன் திறக்கப் பட்டு இருக்கின்றன. கேன்சர், கிட்னி ஃபெயிலியர், பிரைண் டியூமர்கள், ஆஸ்துமா, குஷ்டரோகம், தோல் நோய்கள் குணமாகி இருக்கின்றன. இப்படி சுகம் பெற்றவர்களின் நூற்றுக்கணக்கான சாட்சிகளை நீங்கள் எந்த தேவாலயங் களுக்குப் போனாலும், அவைகளை நேரடியாகவே கேட்கலாம். அதேபோல பிசாசின் கட்டுகள், செய்வினைகளால் மாந்தீரிகங்களால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையில் ஆண்டவர் செய்த அற்புதங்களை, கொடுத்த விடுதலையை அப்படிப் பெற்றவர்களிடமிருந்து கேட்கலாம்.

இதெல்லாம் பொய் இல்லை. எங்கெங்கோ சென்றும், எத்தனையோ கோயில்களுக்கு, மசூதிகளுக்கு, மந்திரவாதி களிடம் சென்றும் விடுதலை கிடைக்காமல் கடைசியில் இயேசு கிறிஸ்துவிடம் வந்து பரிபூரண விடுதலையைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் இப்படி சுகத்தைக் கொடுக்க வில்லை. அவர் கிறிஸ்தவர்களை மாத்திரம் படைக்க வில்லையே. அவர் யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் தெய்வமல்லவே. இந்த உலகத்துக்கே அவர் ஒருவர்தான் தெய்வம். இந்தப் பிரபஞ்சத்தை, சகல ஜீவ ராசிகளையும், மனிதர்களையும் சிருஷ்டித்தது அவர்தானே.

அவரோட பிள்ளைகளில் ஒருவரும் கெட்டுப் போகிறதோ, நோய் நொடிகளில் அவதிப்படுவதோ அவரோட சித்தமல்லை. அவரண்டையில் வருகின்ற எவரையும் அவர் புறம்பே தள்ளுகின்ற தேவன் அல்ல.

கண்ணீரோடு, கலக்கத்தோடு அவரை விசுவாசித்து அவரை நோக்கி கூப்பிடுகிற எவர்க்கும் அவர் சுகத்தை, பெலத்தை, விடுதலையை அளிக்கிறார். அப்படிப் பெற்றுக் கொண்டவர்களின் அனுபவ சாட்சிகளை **'அற்புத சுகமளிக்கும் வைத்தீஸ்வரர் இயேசு', 'தெய்வீக சுகம் உண்டா?' 'நீங்களே எனக்கு சாட்சிகள்', 'இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை ஏன்?'** என்கிற புத்தகங்களில் காணலாம்.

## 14. ஆரோக்கியமாக வாழ்வது எப்படி?

இறைவன் மனிதனை மிக அதிசயமாக, அற்புதமாகப் படைத்திருக்கிறார். மனித உடம்பில் இருக்கிற ஒவ்வொரு உறுப்பும் மற்ற உறுப்புகளோடு இணைந்து, இசைந்து தாயின் கருவில் உருவான நேரத்திலிருந்து தொடர்ந்து இடைவிடாமல் கடைசி மூச்சு வரை ஒரு சிறிது கூட ஓய்வு எடுக்காமல் உழைத்துக் கொண்டே இருக்கின்றன. நாம் உண்ணுகின்ற உணவை அரைத்து கூழாக்கி அதிலுள்ள பலவிதமான சத்துக்களையும் பிரித்தெடுத்து, அந்த அந்த உறுப்புகளுக்குத் தேவையான சத்துக்களை அனுப்பி, கழிவுகளை புறம்பே தள்ளி வெளியேற்றுகின்றன. உடம்புக்கு, அதன் ஆரோக்கியத்திற்கு செயல்பாடுகளுக்கு தேவையான சக்தியை, சீதோஷ்ணத்தை பராமரிப்பை நாம் உட்கொள்ளும் உணவுகளே தருகின்றன. ஒவ்வொரு உறுப்புக்களின் செயல்பாடுகளையும் நாம் சற்று நிதானித்து ஒவ்வொன்றாய் தெரிந்து கொண்டால் பெரிய மலைப்பா இருக்கும். ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்கும்.

மனித மூளை எப்படி செயல்படுகிறது. நம்மோட கண்களின் செயல்பாடு, பார்க்கின்ற உருவத்தின், பொருளின், நிறம், அழகு, தன்மை, அம்சங்கள் எல்லாம் ஒரு வினாடியில் மூளைக்கு தகவல் அனுப்பி, மூளை அதை பதிவு செய்து

கொள்ளும்போது, அது நல்லதா, கெட்டதா, பாதுகாப்பானதா, ஆபத்தானதா அதை என்ன செய்யலாம் என்பது போன்ற பல விஷயங்களை ஒரு க்ஷணப் பொழுதில் அலசி ஆராய்ந்து, சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவு எடுத்து, அந்த முடிவை செயல்படுத்த உடம்பின் மற்ற உறுப்புகளான நாக்கு, வாய், குரல்வளை, கை, கால்கள், தசை நரம்புகளுக்கு தெரியப்படுத்தியவுடன், அவைகளும் உடனே கீழ்ப்படிந்து, செயல்படுகின்றன. அப்பா! நினைச்சுக் கூடப் பார்க்க முடியாத அளவு எவ்வளவு நுட்பங்கள், கோ-ஆர்டினேஷன், ஆக்ஸஸ்.

இப்படி காது, நாக்கு, மூக்கு, இருதயம், லிவர், கிட்னி, வயிறு, குடல், கை, கால்கள் விரல்கள் இவைகளில் உள்ள உணர்வுகள் நகம், இரத்தம், இரத்தத்தில் உள்ள கோடிக்கணக்கான அணுக்கள், இப்படி ஒவ்வொரு உறுப்பாக அதன் செயல்பாடு களை எண்ணிப் பார்த்தால் மிகவும் பிரமிப்பாய், ஆச்சரியமாக இருக்கிறது. ஒவ்வொரு உறுப்பும் எப்படி, எங்கே, எவ்விதமாய் இருக்கணும் என்று ஒரு கை தேர்ந்த கைவினைஞன், கலைஞன் போல அவைகளை உருவாக்கி, அவைகளை அதனதன் இடங்களில் மிகப் பொருத்தமாக பார்த்துப் பார்த்து வைத்திருப்பதைக் கண்டு மலைக்காமல் இருக்க முடியாது. கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். மூக்கு அதன் துவாரங்களை அப்படியே தெரியும் படியாக உயர கொஞ்சம் தூக்கிக்கிட்டு இருந்தா எப்படி இருக்கும். வாயின் உதடுகள் மூடாமல், பற்கள் வெளியே தெரிந்தால் எப்படி இருக்கும். கண்களின் மேல் பட்டைகள் இல்லாமல், அந்த பட்டைகளில் முடியில்லாமல், புருவம் இல்லாமல், அந்தக் கண்கள் முகத்தில் கொஞ்சம் உள்வாங்கி இராமல், வெளியே பிதுங்கிக் கொண்டு இருந்தால் எப்படி இருக்கும் என்று கொஞ்சம் கற்பனையில் நினைத்துப் பாருங்கள். இந்த சரீரத்தில் இருக்கும் எலும்புகள், சதை, நரம்புகள் அனைத்தும் தோலினால் மூடப்படாமல், அப்படியே வெளியே தெரியும்படி இருந்தால் எப்படி இருக்கும் என்று சற்றே நினைத்துப் பாருங்கள். நாம் சாப்பிட்ட உணவு வெளியே வந்திடும் இல்லையா?

எவ்வளவு அழகாக, நேர்த்தியாக, திறமையாக, நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒரு மிகச் சிறந்த கலைஞனின்

கைவண்ணத்தில் உருவான ஒரு அழகான உருவமாக, அந்த உருவத்துக்குள்ளே ஒரு மிகப் பிரமாண்டமான, லட்சக்கணக்கான வேலையாட்கள் பணிபுரியும் ஒரு ராட்சஷ தொழிற்சாலையைப் போல, ஒரு பெரிய அரசாங்கம் போல செயல்படும்படி மிக நேர்த்தியாக மனிதன், மனுஷி படைக்கப்பட்டிருக்கிறார்கள். எத்தனை கோடிக்கணக்கான மக்கள். ஆனால் ஒருவர் போல் மற்றவர் இல்லாமல், வித்தியாசம் வைத்து படைக்கப்பட்டு இருக்கிறோம். ஒரு கைரேகை மற்றவர்களின் கைரேகைபோல் இருக்காது. இப்படி பல உறுப்புகளில் பல வித்தியாசங்கள் படைப்பது என்றால், நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

இறைவனுடைய படைப்புக்கள் என பரந்து விரிந்த வானம், பூமி, கடல், காற்று, நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன், கோள்கள், பால்வெளி, ஜீவனுள்ள பறவைகள், மிருகங்கள், கடல்வாழ் உயிரினங்கள், புல், பூண்டு, மரம், செடி கொடி, வண்ணப் பூக்கள், அவைகளின் நிறம், மணம், குணம்... வாவ்.. நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. இறைவனின் அனைத்துப் படைப்புகளுமே அற்புதம். அதி அற்புதம், அதிசயம், அத்தனை சிருஷ்டிப்புகளிலேயும் மிக மிகச் சிறந்தது, மகத்துவமுடையது, மகோன்னதமானது மனித சிருஷ்டிப்பே.

இந்த சிருஷ்டிப்பு இயற்கையாக, தானாக, அப்படியே இயற்கையாக உருவானது இல்லை. இவ்வளவு விநோதங் களோடு, மதி நுட்பத்தோடு, வியப்புகளோடு, செயல்பாடு களோடு யாராலும், எதாலும், இதை உருவாக்க, சிருஷ்டிக்க, படைக்க முடியவே முடியாது. இவைகள் அனைத்தும் அந்த சர்வ வல்ல சர்வேஷ்வரனால் மட்டுமே இயலும். இந்த சரீரம் கர்த்தருக்குரியது. வேசித்தனத்திற்கோ, விபச்சாரத்துக்கோ, தண்ணி அடிக்கிறதுக்கோ, சிகரெட் பிடிப்பதற்கோ, புகையிலை, பான்பராக் போடுவதற்கோ அல்ல. கோபதாபம், எரிச்சல், வம்பு, வீம்பு, வைராக்கியம், காமாந்தகார எண்ணங்கள், வக்கிர புத்திகளுக்குரிய இடம் அல்ல இந்த சரீரம்.

இதை ஒரு தேவாலயத்தைப் போன்று பராமரிக்க வேண்டும். பேணிக் காக்க வேண்டும். நீங்களே ஜீவனுள்ள தேவனுடைய

ஆலயம்' என்று வேதம் கூறுவதோடு 'தேவன் வாசம் செய்யும் இந்த வாசஸ்தலத்தை தீட்டுப்படுத்தாதீர்கள்' என்றும் எச்சரிக்கிறது. அந்த எச்சரிப்பை மீறினால் என்ன ஆகும்? 'ஒருவன் என் ஆலயத்தைக் கெடுத்தால் நான் அவனைக் கெடுப்பேன்' என்று வசனம் கூறுகிறது. கெடுப்பேன் என்று தேவன் கூறினால் என்ன ஆகும்? கேன்சர் வரும், கட்டி வரும், கிட்னி பெயில் ஆகும். BP சுகர் எல்லாமே வரத்தான் செய்யும்.

இந்த சரீரம் செம்மையான முறையில் ஆரோக்கியமாக செயல்பட என்ன என்ன ஆகாரம் உண்ண வேண்டும் எவைகளை ஒதுக்க வேண்டும் என்பதும் மிக மிக முக்கியம். இவைகளைத் தெரிந்து கொண்டு, ஒரு நல்ல ஆரோக்கியத் தோடு தேவன் கொடுத்த இந்த சரீரத்தை நோய் நொடியில்லாமல் ஒரு பரிசுத்தமுள்ள தேவாலயம் போல பேணிப் பராமரிக்க 'ஆரோக்கிய வாழ்வுக்கு ஒரு தெய்வீக அழைப்பு' என்கிற புத்தகம் உங்களுக்கு உதவும்.

## 15. இந்த உலகம் அழியப் போகிறதா?

இறைவன் இந்த உலகத்தைப் படைக்கும்போது, மனிதன் ஆரோக்கியமாக, சுகமாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் சூரியன், சந்திரன், சீதோஷ்ண நிலை, பருவங்களை எல்லாம் சாதகமாக செயல்படும்படியே படைத்தார். ஆனால் மனிதனோ மனம் போன போக்கில் வாழ்ந்து, இறைவன் வெறுக்கின்ற, அருவருக்கின்ற பலவிதமான அக்கிரமங்களிலும், பாவங் களிலும் ஈடுபட்டு வாழ ஆரம்பித்தான். தேவன் பல தீர்க்கதரிசிகளைக் கொண்டும், நீதிமான்களைக் கொண்டும் எச்சரித்தார். ஜனங்கள் மனந் திருந்தவில்லை. சுமார் கி.மு.2500 ஆண்டுகளுக்கு முன்னால் ஜலப் பிரளயத்தினால் சகல ஜீவராசிகளையும், மனிதர்களையும் அழித்தார். அப்போது நீதியோடு, நேர்மையோடு, உண்மையோடு, உத்தமத்தோடு வாழ்ந்த நோவாவையும், அவன் குடும்பத்தை சேர்ந்த எட்டுப் பேரையும் தவிர இறைவன் படைத்த அனைத்து ஜீவ ராசிகளில் ஜோடி ஜோடியாக இரண்டை மாத்திரம் நோவா கட்டிய பேழையில் காப்பாற்றினார்.

நோவா கட்டிய பேழையும் துருக்கியில் அராரத் மலையில் இப்போது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. பைபிளில் இறைவன் எந்த அளவுகளில் அந்த பேழையை கட்டும்படி கூறியிருந்தாரோ, அதே அளவில் அந்த பேழை இருப்பதாகவும் இன்டர்நெட்டிலும் நாம் காணலாம். இறைவன் இந்த உலகில் வாழ்ந்த அனைத்து ஜீவராசிகளையும், மனிதர்களையும், ஜலப் பிரளயத்தினால் அழித்தது வெறும் கற்பனைக் கதையல்ல. இதை பல நாட்டு விஞ்ஞானிகள் பல ஆண்டு ஆராய்ச்சி களுக்குப் பின்பு கண்டுபிடித்து, உறுதிப்படுத்தியிருக்கின்றனர். பைபிளில் இறைவன் கூறியிருக்கிற ஒவ்வொரு வார்த்தையும் அப்படியே நிறைவேறியிருக்கிறது. தற்போது உலகில் வாழும் நாம் அனைவருமே நோவாவின் சந்ததிகள்தான்.

நோவாவின் சந்ததி பலுகிப் பெருகி, உலகமெல்லாம் பரவி வாழ்கின்ற சமயத்தில் பல்லாயிரம் ஆண்டு இடைவெளியில் ஆங்காங்கே உள்ள சீதோஷ்ண நிலைக்கேற்ப மனிதர்களின் தோலின் நிறம், அவர்களின் உழைப்பு, வம்சாவளிக்கு ஏற்ப உயரம், அங்க அமைப்புக்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால் இறைவனின் சிருஷ்டிப்பில் உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஆண்டான், அடிமை, தீண்டத்தகாதவன், கீழ்ஜாதி, மேல் ஜாதி என்று நம் தேசத்தில் மாத்திரம் இருக்கின்ற தேசியப் பாவமான இந்த வர்ணாஸ்ரமக் கொடுமை, அநீதி வேறு எங்குமே கிடையாது.

நமது தேசத்தில் ஆதியில் இல்லாத இந்த ஜாதி ஏற்றத் தாழ்வுகளை ஆரியர்கள் தங்களுடைய சுயநலத்துக்காக உருவாக்கி, அப்பொழுது அவர்களுக்கிருந்த அரசியல், அரச செல்வாக்கைக் கொண்டு சமூகத்தில் புகுத்தி விட்டனர். பல நூற்றாண்டுகளில் அது நமது சமூகத்தில் ஒரு புற்று நோயைப் போல பரவி அனைவருடைய ரத்தத்திலேயும் அப்படியே ஊறி விட்டது. இந்துத்துவா கொள்கையை நிலை நிறுத்த கொடிப் பிடிக்கும் இந்துத்துவாவின் பல்வேறு அமைப்புகளின் பிரதான நோக்கமே இந்த ஜாதி ஏற்றத்தாழ்வு நிலைக்கு மீண்டுமாய் உயிர் கொடுத்து அதை வலுப்பெறச் செய்ய வேண்டும் என்பதே.

காலப்போக்கில் மனிதர்கள் மீண்டுமாய் துணிகரமாக பாபச் செயல்களில் ஈடுபடலாயினர். சுமார் கி.மு.2060 வாக்கில் இறைவன் சோதோம் கொமாரா பட்டிணத்தை கந்தகத்தினாலும், அமிலத்தினாலும் அங்கிருந்த ஜனங்கள் அனைவரையுமே அழித்தார். அந்த பட்டிணத்தையும் அழித்தார். இன்றும் அந்த இடத்தில் கந்தகமும், அமிலமும் அதிகமாகக் கிடைக்கிறது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இப்போதும் இந்த உலகில் வன்முறைகளும், தீவிரவாதங்களும், விக்கிரஹ ஆராதனைகளும், வேசித்தனமும், விபச்சாரமும், பாலியல் கொடுமைகளும், அநீதியும், அக்கிரமங்களும் பெருகிக் கொண்டு இருக்கின்றன. தேவன் இப்பூமியை அக்னிக்கு இரையாக வைத்திருக்கிறார் என சத்தியவேதம் கூறுகிறது.

அதற்கு ஏற்றாற்போல சூரியனை சுற்றி இருக்கிற காந்தப்புயல் பல இலட்சம் மின் அழுத்தத்தோடு பூமியைத் தாக்கி சுட்டு சாம்பலாக்கப் போகிறது என்று நாசா விஞ்ஞானிகளும், பல தேசத்து விஞ்ஞானிகளும் கூறுகின்றனர். இக்கூற்றை உறுதிப்படுத்தும் விதமாக சூரியனிலிருந்து வரும் அல்ட்ரா வயலட் ரேசஸ்களை, நமது பூமியை நேரடியாகத் தாக்காதபடி இதுவரை காத்துவந்த ஓசோன் திரை பூமியின் மாசுகளால் இப்போது கிழிந்து, சூரியனின் வயலட் கதிர்கள் பூமியை நேராகத் தாக்குகின்றன. இதனால் தோல் கேன்சர் மற்றும் பலவிதமான கொடிய தோல் நோய்கள் வரும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பைபிளில் 2000 ஆண்டுகளுக்கு முன்பே கூறப்பட்டுள்ள வானத்திலிருந்து அக்கினி விழுதல், பூகம்பம், பூமி அதிர்ச்சி, சுனாமி, கொள்ளை நோய்கள், பருவங்கள் மாறி மழை பெய்ய வேண்டிய நேரத்தில் பெய்யாமல், பெய்ய வேண்டாத நேரத்தில், இடத்தில் பெய்வது, அதிகமான குளிர், அதிகமான சூரிய வெப்பம், வெள்ளம், பஞ்சம், வறட்சி, ஜனங்களுக்கு விரோதமாக ஜனங்கள், தேசத்துக்கு விரோதமாக தேசம், போர் மூளும் அபாயம் என்று எல்லாமுமே அப்படியே வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறி வருகிறது. இதுவரை பைபிளில் சொல்லப்பட்டுள்ள முன்னுரைப்புகள் அனைத்தும் அப்படியே

வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியிருக்கிறது. அதேபோல இனி என்ன நடக்கும் என்று சொல்லப்பட்டு இருக்கிறதோ அவைகள் நடந்தே தரும் என்பதற்குரிய அறிகுறிகள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன.

இந்த உலகம் அழியப் போவது உறுதி. அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. நினைத்துக் கூடப் பார்க்கவும் முடியாத அளவுக்கு நாசத்தையும் மோசத்தையும், அழிவையும் ஏற்படுத்தக் கூடிய அணுசக்தி குண்டுகள், ஏவுகணைகளை ஒவ்வொரு நாடும் ஆயிரக்கணக்கில் செய்து வைத்திருக்கின்றன. இப்போது இவ்வுலகில் உள்ள அணுசக்தி ஆயுதங்களில் 5% மட்டுமே உபயோகித்தாலும், இந்த பூமி முழுவதும் சுடுகாடாகி விடும். பிறகு ஒரு சின்ன புல் பூண்டு கூட முளைக்காத அளவுக்கு மயான பூமி ஆகிவிடும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். இவைகளைப் பற்றி இன்னும் விரிவாக, விளக்கமாக, ஆதாரங்களுடன் தெரிந்து கொள்ள **'ஓர் அவசர அறைகூவல்', 'இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை', 'சிலை வணக்கம் சின்னாபின்னமாக்கியதே', '666 எச்சரிக்கை', 'இது உயிர் காக்கும் முயற்சி'** என்கிற நூல்களைப் படித்துப் பாருங்கள்.

## 16. இந்திய சமாதானத்துக்கு எது தேவை?

நமது தேசத்தில் 20 ஆம் நூற்றாண்டு முதல் மிக அதிக அளவில் ஜாதி, மத, இன, மொழி, ஆறுகள், நதிகள், அணைக் கட்டுகள் என்கிற பெயரில் வன்முறைகளும், தீவிரவாதங் களும், அடிதடி, கொலை, கொள்ளை, கடையடைப்பு, ஹர்த்தால், ஸ்டிரைக், பஸ் எரிப்பு, கல்லை விட்டெறிதல், ரயிலைக் கவிழ்த்தல், தண்டவாளத்தை பெயர்த்தல், குண்டு வெடிப்பு, துப்பாக்கி சூடு, கண்ணிவெடி வைத்தல், பிணைக் கைதிகளாக அதிகாரிகளை, ஜனங்களை பிடித்து வைத்தல், தேவாலய இடிப்பு, கிறிஸ்தவர்களைத் தாக்குதல், கர்வாப்சி என்கிற பெயரில் கட்டாய மதமாற்றம், போதகர்கள், ஊழியக்காரர்களை அடித்தல், இந்தியா இந்துக்களுக்கு மட்டுமே என்று பிரிவினைக் குரல், பிள்ளைகளை கிறிஸ்தவப் பள்ளிகளில் சேர்க்காமலிருக்க இந்துக்கள் உறுதிமொழி எடுப்போம் என்று கூறி தேச ஒற்றுமைக்கு, சமாதானத்திற்கு,

அமைதிக்கு சமாதி கட்டி, நமது தேசத்தின் மதச்சார்பின்மை கொள்கையை குழிதோண்டிப் புதைக்கும் வெறியோடு சில மதவாத சக்திகள் அரசியல் பின்புலத்தோடு செயல்படுகின்றன.

இது சில ஆண்டுகளுக்கு முன்பு கர்நாடகாவிலும், குஜராத்திலும், ஒரிசா, பீகார், உ.பி. மாநிலங்களிலும் மிக அதிக உக்கிரத்தோடு தலைவிரித்தாடி பல உயிர்களைக் காவு கொண்டது. சில இந்துத்துவா அமைப்புகள் கிறிஸ்தவர்கள் மதமாற்றம் செய்கின்றனர் என்று குற்றம் சுமத்துகின்றனர். அதற்காக பணம் கொடுக்கின்றனர் என்றெல்லாம் தவறான எண்ணம் கொண்டுள்ளனர். கிறிஸ்தவர்கள் எவரும் யாருக்கும் பணம் கொடுத்து கிறிஸ்தவர்களாக மாற்றுவது இல்லை. இது மதமாற்றமல்ல, மனமாற்றமே. கிறிஸ்தவம் ஒரு மதமே அல்ல. அது ஒரு மார்க்கம்.

எத்தனையோ நன்கு படித்தவர்கள், உயர் பதவிகளில் இருப்பவர்கள், பக்தி வைராக்கியமுள்ள வைதீக, பிராமணக் குடும்பத்தில் உள்ளவர்கள், பெரிய பெரிய கம்பெனிகளில் ஜெனரல் மேனஜராக, சீப் எக்சிகியூட்டிவ் ஆபீஸர்களாக, நிர்வாக அதிகாரிகளாக இருக்கக் கூடிய பல முஸ்லீம்கள், ஐயர்கள், ஐயங்கார்கள், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ளனர். இப்படி உயர் பதவியில் வாழ்வின் உயர் மட்டத்தில் இருப்பவர்களுக்கு யாராவது பணம் கொடுத்து மத மாற்றம் செய்ய முடியுமா? கோயில் பூசாரிகள், மந்திரவாதிகள், குடி, போதை, சிகரெட் மற்றும் பல்வேறு புகையிலை பழக்க வழக்கங்களுக்கு அடிமையானவர்கள், கொடிய பாவகரமான வாழ்க்கை வாழ்ந்தவர்கள், கொலை, கொள்ளை, கள்ளச் சாராயம் காய்ச்சுதலில் ஈடுபட்டவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவர்களின் கடந்த வாழ்க்கையின் பாவப் பழக்கங்களிலிருந்து பரிபூரண விடுதலை பெற்றுள்ளனர். தூக்கு தண்டனை, ஆயுள் தண்டனை பெற்ற பல கைதிகள் மனம் மாறியிருக்கின்றனர். பிசாசின் கட்டுக்களில் செய்வினைக் கட்டுக்களில் மாட்டிக் கொண்டு விடுதலை பெற்றவர்களின் பல சாட்சிகளையும் படிக்க **'இந்தியாவுக்கு இயேசு தேவை ஏன்?'** என்கிற புத்தகத்தை படித்துப் பாருங்கள்.

ஒன்றுமே இல்லாத ஒரு உப்புப் பெறாத விஷயத்திற்கே இன்று நமது நாட்டில் பல போராட்டங்கள் ஸ்டிரைக் நடக்கிறது. கிறிஸ்தவர்களுக்கு எதிராக இதுவரை எத்தனையோ வன்முறைகள், தாக்குதல்கள், அக்கிரமங்கள் நடந்துள்ளன. எங்கேயாவது, எப்பவாவது அதற்காக கிறிஸ்தவர்கள் வன்முறையிலோ, பழிக்குப் பழி வாங்கும் செயல்களிலோ ஈடுபட்டு இருக்கிறார்களா? ஏன் அவர்கள் எந்தத் தீவிரவாதத்திலும், போராட்டத்திலும் ஈடுபடவில்லை? பயமா? வசதி வாய்ப்பு, பண வசதிகள் இல்லையா? கிறிஸ்தவத்தில் ஆண்கள், ஆண்மை உள்ளவர்கள் இல்லையா? ஏன் அவர்களும் வெடிகுண்டு வாங்கி பல கோயில்களை, பொது இடங்களை தகர்க்கலாமே. துப்பாக்கி சூடு நடத்தலாமே. கிறிஸ்தவர்களில் இளைஞர்கள் இல்லையா? ஏன் அத்தனை அக்கிரமங்களையும் கொடுமைகளையும் பொறுமையாக சகித்துக் கொள்கின்றனர்? இது கிறிஸ்தவர்களின் பலவீனம் அல்ல. இதுதான் அவர்களின் முழங்கால் பலம்.

கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிப்பதற்கும், எதை இழப்பதற்கும் தயாராக உள்ளவர்களே கிறிஸ்தவர்கள். அவர்கள் வன்முறையில் ஈடுபட, திருப்பித் தாக்க, பழிக்குப் பழி வாங்க எவ்வளவு நேரம் ஆகும்? பின் ஏன் அவர்கள் எங்கும் எதுவுமே செய்வது இல்லை? ஏனென்றால், அப்படிச் செய்யச் சொல்லி இயேசு கிறிஸ்து சொல்லவில்லை. சத்தியவேதம் அப்படி அவர்களுக்கு போதிக்கவில்லை. கிறிஸ்தவ போதகர்கள் அப்படி செய்யச் சொல்லி கிறிஸ்தவ விசுவாசிகளை தூண்டுவது இல்லை. அமைதியோடு, பொறுமையோடு, சகிப்புத் தன்மையோடு, அடக்கத்தோடு இருப்பதற்கே போதிக்கின்றனர். 'உங்கள் சத்துருக்களையும் சிநேகியுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், துன்பப்படுத்துகிறவர் களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள். பழிக்குப் பழி வாங்க வேண்டாம். ஒருவன் உனது வலது கன்னத்தில் அறைந்தால், உன் இடது கன்னத்தையும் காட்டு' என்கிற கிறிஸ்தவ உபதேசத்துக்கு கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிவதனாலேயே எந்தவித வன்முறையும், பழிக்குப் பழியும் இல்லை.

கிறிஸ்தவர் அந்த சமயத்தில் கண்ணீரோடு முழங்கால் மண்டியிட்டு வேண்டுவார்கள். ஆனால் கர்த்தர் அவர்களுக்காக களம் இறங்குவார். 'உன்னைத் தொடுகிறவன் என் கண்ணின் மணியைத் தொடுகிறான். பழிவாங்குவதை என்னிடம் விட்டுவிடு' என்று கர்த்தர் களம் இறங்குவார். அந்த சர்வ வல்ல தேவனை எதிர்த்து நிற்பவர் யார்? கிறிஸ்துவை, கிறிஸ்தவத்தை, கிறிஸ்தவர்களை, போதகர்களை, ஊழியக்காரர்களை, எதிர்த்தவர்களின் கதி என்னவாயிற்று? எதிர்த்த, துன்புறுத்திய நாடுகள், நகரங்கள், சாம்ராஜ்யங்கள், சக்கரவர்த்திகள், மன்னர்கள், ஜாதிகள், இனம் எல்லாம் என்னவாயிற்று என்பதை சரித்திர ஆதாரத்தோடு, வரலாற்று சான்றுகளோடு அறிந்து கொள்ள 'கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு', 'கிறிஸ்தவர்களை எதிர்ப்பதன் விளைவு' என்கிற புத்தகங்களை படித்துப் பாருங்கள். நமது தேசத்திலும், உலகின் பல பாகங்களிலும் நடந்த பல சரித்திர உண்மைகளை இப்புத்தகங்களில் காணலாம்.

நமது தேசத்தில் உள்ள பல்வேறு இனம், மொழி, மதம், கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒற்றுமையாக, அமைதியாக, சமாதானமாக, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக வாழவும் பொறுமை, சகிப்புத் தன்மை, பரஸ்பர அன்பு, நாம் அனைவரும் ஒரு தேசத்து மக்கள் என்கிற ஒரு உணர்வோடு வாழவும், நீதி நேர்மை, உண்மை, உத்தமம், மனித நேயம் போன்ற உயர்ந்த மனிதப் பண்புகளோடு வாழவும் எப்பேர்ப்பட்ட கொடியவர்களையும் பண்படுத்துகிற, மாற்றுகிற, புடமிடுகிற பக்குவப்படுத்துகிற, இயேசு கிறிஸ்து தேவை என்பதை ஆணித்தரமாக கூறும் புத்தகங்களே மேலே கூறப்பட்டுள்ள புத்தகங்கள். படியுங்கள். இவைகள் உங்கள் மனதைப் பண்படுத்தும்.

## இந்தியா ஒரு இந்து மத நாடா? இல்லை.

'இந்து' என்கிற சொல் பழந்தமிழ் இலக்கியங்களிலோ, அல்லது சங்க கால நூல்களிலோ வேதம், வேதாந்தங்களிலோ சித்தர்களின் பாடல்களிலோ அல்லது சமஸ்கிருத வேதங்களிலோ, ஸ்லோகங்களிலோ, இலக்கியங்களிலோ

எதிலுமே இல்லை. சிந்து நதி தீரத்தில் வாழ்ந்தவர்களை சிந்தியர்கள் என்று கூறுவதற்கு முடியாமல் நமது நாட்டிற்கு நாடோடிகளாக வந்த பாரசீகர்கள், இந்தியர்கள் என்று உச்சரித்தனர். இந்து என்கிற சொல் நமது தேசத்தில் வாழ்பவர்களைக் குறிக்கும் ஒரு சொல்லே தவிர அது ஒரு மதத்தைக். குறிக்காது என நமது தேசத் தலைவர்களான மகாத்மாகாந்தி, ஜவஹர்லால் நேரு, டாக்டர் அம்பேத்கர், டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் கூறியிருக்கின்றனர். இது வெளிநாட்டிலிருந்து வந்த முஸ்லீம்களால், ஆங்கிலேயர்களால் கொடுக்கப்பட்ட பெயர்.

கி.பி. 52இல் இயேசு கிறிஸ்துவினுடைய நேரடி சீஷரான செயின்ட் தாமஸ் (புனித தோமா) நமது தேசத்திற்கு வந்து இயேசுவின் நற்செய்தியை அறிவித்தார். அந்த சமயத்தில் நமது தேசத்தில் இந்துமதம் என்கிற ஒன்றே கிடையாது. புத்த மதமும், சமண மதமும் மாத்திரமே இருந்தன. இவைகள் இரண்டுமே கடவுள் கொள்கையை மறுதலிக்கின்ற நாத்தீகக் கொள்கை யுடைய மதங்கள். புனித தோமா வந்து நற்செய்தியை அறிவித்ததின் விளைவாக முதன் முதலில் வெளிவந்த கிறிஸ்தவ நூல் திருக்குறள். கிறிஸ்தவத்தின் திரித்துவம், மூவொருமைக் கொள்கை, பலிக் கொள்கை, அவதாரக் கோட்பாடு, பாவமன்னிப்பு, மீட்பு கோட்பாடுகளை மிக அழகாக 1330 குறட்பாக்களிலும் வள்ளுவர் வடிவமைத்துள்ளார். ('திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி' என்கிற நூலைக் காணவும்)

அதன்பிறகு ஆழ்வார்கள், நாயன்மார்கள், சைவக் குறவர்கள், சித்தர்கள் தோன்றி தேவாரம், திருவாசகம், 4000 திவ்யப்பிரபந்தம், போற்றிப் பஃறொடை, சிவஞானபோதம் எல்லாம் வெளிவந்து கிறிஸ்தவத்தின் அடிப்படையில் உருவானதே சைவம், வைணவம் என்கிற இந்து மதத்தின் இரு மேஜர் பிரிவுகளும். இந்து மதம் ஒரு ஆதி இந்திய கிறிஸ்தவம் என்று சமய வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். தற்போதுள்ள இந்துக்கள் ஆராதிக்கும் சிவன், பிரம்மா, விஷ்ணு, முருகன், பிள்ளையார், ஐயப்பன், சக்தி அனைத்துமே

[illegible]

[illegible]

## [illegible]?

[illegible]

களிலும், சித்தர்கள், ஞானிகளின் பாடல்களிலும் மிகத் தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டு இருக்கின்றது.

அப்போ இந்த கோவில்களில் அர்ச்சனை, அபிஷேகம், ஆராதனை செய்யப்படுகின்ற உருவங்கள், புராணங்களில் சித்தரிக்கப்படுகின்ற தெய்வங்கள், அந்த தெய்வங்களுக்கு திருமணம், மனைவி, பிள்ளைகள், அந்த தெய்வங்கள் செய்ததாகக் கூறப்படும் அற்புதங்கள், அனைத்திற்கும் உரிய நாள் நட்த்திரங்கள், ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரிய பல நெய்வேத்தியங்கள், படையல்கள், அர்ச்சனைப் பூக்கள், அலங்காரங்கள், மந்திரங்கள், ஸ்லோகங்கள், பரிகாரங்கள், க்ஷேத்திராடனங்கள் இவைகளெல்லாம் எப்படி வந்தன? இவைகளுக்கு அர்த்தம் இல்லையா? இவைகள் எல்லாம் யார் எப்போது அறிமுகப்படுத்தினார்கள்?

நாம் செய்யும் இத்தனை அர்ச்சனைகள், அபிஷேகங்கள், கூறப்படும் மந்திர உச்சாடனங்கள் அனைத்தும் அந்த தெய்வங்களை மகிமைப்படுத்துகின்றனவா? இவைகள் இறைவனை சென்றடைகின்றனவா? வானத்தையும் பூமியையும் படைத்த அந்த சர்வ வல்ல சர்வேஷ்வரனை அவரே படைத்த மிருகங்கள் ரூபத்தில் ஒரு சிலையாக வடித்து அவைகளை ஆராதித்தால், அந்த பரமேஷ்வரனையே கேவலப்படுத்துவதாகாதா? மனிதனுக்கு இறைவன் ஆறு அறிவுகளைக் கொடுத்திருக்கிறார். மிருகங்களுக்கு 4, 5 அறிவு இருக்கிறது. அவைகள் மனிதனுக்கு அருள் புரியுமா? நாம் சிந்தித்துப் பார்ப்பதற்குத்தானே இறைவன் மனிதனுக்கு பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறார்? மிருக வணக்கம் அறிவுசார்ந்த ஒரு செயலா? இறைவனை இவைகள் பிரீதப்படுத்துமா? இவைகளைச் செய்வதினால் நமக்கு, நம்முடைய பிள்ளைகளுக்கு, தேசத்திற்கு நன்மைகள் உண்டாகுமா?

இந்த சிலை வணக்கம் தேசத்திற்கு க்ஷேமத்தைக் கொடுத் திருக்கிறதா? இல்லை, அந்த தேசங்களை சின்னப்படுத்தி யிருக்கிறதா போன்ற பல கேள்விகளுக்கு விடை காண, அனைத்தையும் ஆதாரத்தோடு, சான்றுகளோடு, வரலாற்று

பின்னணியோடு விளக்கமும் தெளிவும் பெற **'சிலை வணக்கம் சின்னாபின்னப்படுத்தியதே'** என்கிற நூலைப் படித்துப் பாருங்கள். நாடுகள், நகரங்கள், சாம்ராஜ்யங்கள், சிலை வணக்கத்தில் ஈடுபட்ட ஜனங்கள் என்ன கதிக்கு ஆளானார்கள் என்கிற சரித்திர உண்மைகளை தெரிந்து கொள்வது நம்மை சிந்திக்க வைக்கும். நாம் செல்லும் பாதை சரியானதுதானா? என்று சீர் தூக்கிப் பார்க்க உதவும்.

## குடி குடியைக் கெடுக்கும்

நமது தேசத்தில் இன்று குடிப்பழக்கத்திற்கும், போதைப் பழக்கத்திற்கும் அடிமையாகிக் கொண்டிருக்கிறவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதில் கொடுமை என்னவென்றால், சில மாநிலங்களில் அங்குள்ள அரசே மதுபானத்தை தயாரித்து, கடைகளைத் திறந்து விற்பனை செய்கிறது. கேட்டால் அரசு தரமான சரக்கை தயார் செய்து கொடுக்கிறது. மதுபான தயாரிப்பு, விற்பனையை அரசே செய்யாவிட்டால், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் பெருகி, அதனால் ஜனங்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்றும், இதனால் அரசுக்கு கணிசமான வருமானம் வருகிறது என்றும் அந்த பணத்தை ஜனங்களின் நலத் திட்டங்களுக்காக செலவழிக்கிறோம் என்றும் சப்பைக் கட்டு கட்டுகிறார்கள். மதுபானம் தயாரிக்காமல், விற்காமல், இருக்கும் எத்தனையோ மாநிலங்கள் இந்த தேசத்தில் இருக்கின்றனவே. அவைகள் எப்படி செயல்படுகின்றன?

இந்த குடி போதையினால் எத்தனைக் குடும்பங்கள் அழிகின்றன. கண்ணீர் வடிக்கின்றன, குழந்தைகள் பட்டினி கிடக்கின்றன. மனைவி, பிள்ளைகள், அடி உதை சித்திரவதைகளுக்கு ஆளாகின்றனர். தேசத்தில் நடக்கும் பலவித வன்முறைகள், பாலியல் கொடுமைகள், கொலை, கற்பழிப்பு, சாலை விபத்துகளுக்கு காரணமே இந்த குடிதான் என்று சமூகவியல் ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இளம் வயதிலேயே, பள்ளிப் பருவத்திலேயே குடிப்பழக்கத்துக்கு அநேகர் அடிமை ஆகின்றனர். அப்படி குடிப் பழக்கத்திற்கு அடிமையாகி நண்பர்களுடன் குடித்து கும்மாளமிட்டு, பல

அக்கிரமங்களையும் அநியாயங்களையும் செய்கின்ற ஒருவன், குடிக்கு தேவைப்படும் பணத்திற்காக கூலி வேலை செய்யும் பெற்ற தாயையே அடித்து துன்புறுத்தி அவளிடமிருந்து சொற்ப காசையும் பிடுங்கிக் கொண்டு போய் குடிக்கின்றவனுடைய வாழ்க்கை மிக அழகாக, அருமையாக, பார்ப்பவர்களின் இருதயத்தைத் தொடும் வண்ணம் ஒரு டெலிஃபிலிமாக ஜே. ரமேஷ் என்பவர் கதை எழுதி டைரக்ட் செய்துள்ளார்.

இருதய நோயினால் பாதிக்கப்பட்ட தாய் வாங்கி வைத்திருந்த மருந்து மாத்திரைகளைக் கூட திரும்பவும் மருந்துக் கடையில் கொண்டு போய் கொடுத்து அதைக் காசாக்கி கள்ளச் சாராயம் குடித்து உயிர் போகின்ற நிலையில் மயங்கிக் கிடந்தவனை ஒரு போதகர் கண்டு ஆஸ்பத்திரியில் சேர்த்து, அவனுடைய உயிர் காப்பாற்றப்பட்டாலும், கண் பார்வையை இழந்து விடுகிறான். மருந்து இல்லாமல் தாய் நெஞ்சு வலியில் இறக்கிறாள். தாயின் இறப்புக்கு மகனே காரணம் என்று அறிந்த ஜனங்கள் அவனை தாயின் பிணத்தைக் கூட தொட விடாமல் விரட்டி விட்டு, அடக்கம் பண்ணு கின்றனர். கண் பார்வையையும் இழந்து, அரவணைத்து ஆதரித்த அருமைத் தாயையும் இழந்த நிலையில் அநாதையாய் செய்த தவறுகளை உணர்கிறான். அந்த போதகர் அவனை ஆற்றித் தேற்றி அரவணைத்து அன்பு காட்டி கிறிஸ்துவுக்குள் வழி நடத்துகிறார்.

இயேசுவை ஏற்றுக் கொள்ளும் அவனுக்கு ஆண்டவராகிய இயேசு கண் பார்வையைத் திரும்பக் கொடுக்கிறார். இயேசுவின் அன்பை அவன் பிறர்க்கு அறிவிக்கும் ஊழியக்காரனாக மாற்றுகிறார். அமாவாசை போல் இருளான வாழ்க்கையில் வாழ்ந்த அவனுடைய வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் வந்த பிறகு அவனுடைய வாழ்க்கை ஒளிமயமானது. குடி, போதை, கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து பரிபூரண விடுதலை பெற்று வாழ்வில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெறும் ஒருவனின் வாழ்க்கை சரிதம் **'அமாவாசை'** என்கிற அருமையான திரைப்படமாக வெளிவந்துள்ளது. **'சத்தியத்தைத் தேடி'**, **'ஒளியைத் தேடி'**, **'பயணிகளின் சுவனத்திற்கு'** போன்ற பல நல்ல கிறிஸ்தவ

சுவிசேஷப் படங்களை இயக்கிய திரு. ரமேஷ் அவர்கள் இப் படத்தை எழுதி இயக்கியுள்ளார். பார்ப்பவர்களின் உள்ளத்தை கண்டிப்பாகத் தொடக் கூடிய ஒரு திரைச்சித்திரம் இது.

## தமஸோமா ஜோதிர்கமய (இருளிலிருந்து ஒளியைத் தேடி)

இந்துக்களின் பக்திக்கு ஈடு இணையே கிடையாது. ஆனால் பக்தி வைத்த இடம் தப்பு. அப்பா அம்மா இந்துவாக இருப்பதால் அவர்களும் இந்துவாக இருக்கின்றனர். அவர்கள் இஸ்லாமியர் என்றால் பிள்ளைகளும் இஸ்லாமியர்கள். அப்பா, அம்மா கிறிஸ்தவர்கள் என்றால் பிள்ளைகளும் கிறிஸ்தவர்கள். யாருமே தாங்கள் சார்ந்துள்ள மதத்தின் வேதங்களையும், மற்ற சமயங்களின் வேதங்களையும் கற்றுத் தேர்ந்து அவர்கள் இருக்கின்ற மதத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்வதில்லை. அப்படிச் செய்பவர்கள் மிக மிக அரிது. சிறந்தது எது என்று தெரிந்தாலும் பாரம்பரியம், ஜாதி, சமூகம் என்ன சொல்லும் என்கிற தயக்கத்தில் தாங்கள் அறிந்த சத்தியத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு அதைக் கடைப்பிடிக்க தயக்கம், முடிவதில்லை. அதிலும் குறிப்பாக பக்தி வைராக்யமுள்ள பிராமணக் குடும்பத்தில் பிறந்த ஒரு கிறிஸ்தவ வாலிபரால் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்வது என்பது மிகவும் கடினமான ஒன்றே.

ஆனால் இறைவன் நினைத்தால் அவரால் கூடாத காரியம் என்ன இருக்கிறது? எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும், மனிதர்கள் உருவாக்கிய பாரம்பரியம், ஜாதி சமயங்களையும் உடைத்து எறிந்து, தமக்கென தெரிந்து கொண்டவர்களை ஏற்ற வேளையில் தொடுவார் அல்லவா? அப்படி ஒரு வைதீக பிராமணக் குடும்பத்திலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்தான் சம்பத்குமார். லேசில் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் உள்ளத்தில் கிறிஸ்தவத்தைக் குறித்து எழுந்த ஏகப்பட்ட கேள்விகள், சந்தேகங்களுக்கு விளக்கம் தேடி அலைகிறார். அவர் உள்ளத்தில் எழுந்த கேள்விகள், அதற்கு விளக்கம் பெற்றுக் கொள்ள கர்த்தர் ஏற்படுத்திக் கொடுத்த சந்தர்ப்பம், வாய்ப்புக்கள் அனைத்தும் உள்ளத்தைத் தொடுவதாக

இருக்கிறது. திறந்த மனதோடு, வாஞ்சையோடு தேடுகின்ற யாவர்க்கும் அவர் வெளிப்படுவாரே.

சம்பத்குமாரின் வாழ்க்கையில் நடந்தது என்ன? யாரைக் கொண்டு எப்படி ஆண்டவர் அவரைத் தொட்டார் என்கிற உண்மை சம்பவங்களை மிக அழகாக தன்னுடைய சாட்சியத்தில் கூறியிருக்கிறார். அவருடைய சந்தேகங்களுக்கு கிடைத்த விளக்கமும், பதிலும் நிச்சயமாக பலபேருடைய அகக் கண்களைத் திறக்கும். இயேசு ஒருவரே மெய்யான தேவன் என்று கண்டு கொள்ள உதவும் என்பதில் சந்தேகமே இல்லை. இந்த உலகிற்கு ஒளியாக வந்து அவரண்டையில் வருகின்ற எவரின் வாழ்க்கையையும் பிரகாசிக்கச் செய்கின்ற இயேசு கிறிஸ்து இந்த மெய்சாட்சியை படிக்கின்ற பலரின் வாழ்க்கையைக் கண்டிப்பாக தொடுவார் என்பது சர்வ நிச்சயம். **'தமஸோய ஜோதிர்கமய'** - (இருளிலிருந்து ஒளியைத் தேடி).

அவர் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பாக என்ன என்ன கேள்விகள், சந்தேகங்கள் எல்லாம் கேட்டார், எந்த சூழ்நிலையில் எப்படி அவர் முழுமையாக மனம் திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார் என்பதை, இந்துமத வேதங்கள், உபநிஷத்துக்கள், வேதாந்தங்கள், முனிவர்கள், ஞானிகள், தபசிகள், சித்தர்களின் பாடல்கள், சமஸ்கிருத ஸ்லோகங்கள் மூலமாக பரிபூரண விளக்கம் பெற்ற பிறகே அவர் கிறிஸ்தவராக மாறினார். அவருக்கு இருந்த சந்தேகங்கள், கேட்ட கேள்விகள் அதற்கு அவருக்கு கிடைத்த பதில், விளக்கங்கள் அனைத்தும் கிறிஸ்தவர்களுக்கும், புற ஜாதி மக்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தவும், சுவிசேஷத்தை அறிவிக்கவும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வாங்கிப் படித்துப் பாருங்கள்.

## இந்தப் புத்தகங்களை மொத்தமாகப் பெற்றுக் கொள்ள

இயேசு கிறிஸ்து ஒருத்தர்தான் தெய்வமா? தெய்வமாகப் போற்றப்படும் மற்றவைகள் தெய்வமில்லையா? இயேசு ஒருத்தராலதான் பாவத்தை மன்னிக்க முடியுமா? அவரால மாத்திரம்தான் சந்தோஷம், சமாதானம், மோட்ச வாழ்வை கொடுக்க முடியுமா? இதுகுறித்து நம்மோட இந்துமத வேதங்களே என்ன சொல்கிறது? சித்தர்கள், ஞானிகள் என்ன சொல்கிறார்கள்? இந்த ஜாதி, மதம் எல்லாம் நமக்குத் தேவையா? என்பன போன்ற பல கேள்விகளுக்கு விடை தந்து உங்களைப் பலப்படுத்தி, சத்தியத்தை அறிந்து, வாழ்க்கையில் இதுவரை அறியாத சந்தோஷம் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள இந்தப் புத்தகங்கள் பெரிதும் உதவும் என்கிற நோக்கத்திலேயே புத்தகங்களை 10 ரூபாய்க்கே கொடுக்க தேவன் கிருபை தந்தார். அதேபோல **VCD** யையும் 10 ரூபாய்க்கே கொடுக்க அருள் புரிந்தார். நல்ல சத்தியத்தை அறிவிக்கும் டெலிஃபிலிம்களாக 'அமாவாசை' மற்றும் 'ஆனந்தப் புதுவாழ்வு' என்று இரண்டு **DVD**களை வெளியிடவும் தேவன் இரக்கம் பாராட்டினார். மெய்தேவன் இயேசுவே என்பதை சந்தேகமற நிரூபிக்கும் 30 புத்தகங்களையும், 3 **VCD**, 2 **DVD** களையும் அப்படியே பெற்றுக் கொள்ள ரூ.550/- **M.O** செய்யுங்கள். இவைகளை அனுப்பும் தபால் செலவை நாங்களே ஏற்றுக் கொள்கிறோம். 'H' செட் ஒன்று **VCD, DVD** யோடு அனுப்புங்கள் என்று **MO** பாரத்தில் எழுதி அனுப்புங்கள். **DVD** இல்லாமல் 30 புத்தகம், 3 **VCD** மட்டும் அனுப்ப ரூ.330 அனுப்புங்கள்.

## சேப்டர் - 2
## கிறிஸ்தவர்களுக்குரிய புத்தகங்கள்

### 1. இயேசு கிறிஸ்து உன்னோடு பேசுகிறார்

கிறிஸ்துவுக்குள்ள இருக்கிற எல்லோருமே ஒரு காலக்கட்டத்தில் இந்து மார்க்கத்திலிருந்து வந்தவங்கதான். ஏன் வந்தாங்க? அந்த மார்க்கத்திலே கிடைக்காத சந்தோஷம், சமாதானம், நிம்மதி, பிரச்சனைக்குத் தீர்வு, நோய் நொடி, குடிப்பழக்கம், புகை, புகையிலை பழக்க வழக்கங் களிலிருந்து, கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை, பிள்ளைகளின் படிப்பு, வேலை, திருமணம், குழந்தை பாக்கியம், நம்மோட ஜெபம், விண்ணப்பங்களுக்குப் பதில், ஆண்டவரோட வருகையின் போது நாம் எடுத்துக் கொள்ளப்படுதல், மறுமை யில் நித்தியத்திற்கும் நாம் ஆண்டவரோடு பரலோகத்தில் இருக்கும் பாக்கியம். இந்த மேஜர் காரணங்களுக்காகத்தான் நாம் கிறிஸ்துவுக்குள்ளேயே வந்தோம், இல்லையா? ஆனா நாம ஏறெடுக்கிற ஜெபத்திற்கு, விண்ணப்பத்திற்கு ஆண்டவரிடமிருந்து பதில் வருதா?

சிலரோட ஜெபத்துக்கு உடனே பதில் வருது. அற்புதம் நடக்குது. நம்மோட ஜெபத்துக்கு பதில் வரமாட்டேங்குது. ஏன்? குறை ஆண்டவர்கிட்டே இல்லை. நம்ம கிட்டதான் குறை இருக்கு. என்ன குறை? செக் பண்ணுங்க. நாம கிறிஸ்துவுக்குள்ளே இருக்கலாம். ஆனா நமக்குள்ளே இயேசு கிறிஸ்து இருக்கிறாரா? அவரோட நல்ல குணங்கள் எல்லாம் நம்மகிட்ட இருக்குதா? ஜெபக் குறைவா? வேதவாசிப்புக் குறைவா? பரிசுத்தக் குறைவா? நம்மில் என்ன குறை இருக்கிறது என செக் பண்ணுங்கள். தேவன் அருவருக்கின்ற

ஏதாவது, காரியங்கள், செயல்பாடுகள், சிந்தனைகள், கோபதாபங்கள், வம்பு வீம்பு வைராக்கியங்கள், எரிச்சல், பழிவாங்குகிற நினைப்பு, மன்னிக்காத கடின இருதயம் என்று ஏதாவது இருக்கிறதா? நம்மோட ஒவ்வொரு சொல்லும், செயலும், சிந்தனையும் தேவனுக்கு பிரீதமாக இருக்குதா? நம்மோட தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, தாம்பத்ய வாழ்க்கை, சமூக வாழ்க்கை, அலுவலக வாழ்க்கை, ஆவிக்குரிய ஜீவியம் எப்படி" இருக்கிறது? தேவனை மகிமைப்படுத்தும்படியாகவா? அல்லது அவருடைய நாமத்தை தூஷிக்கப்படும்படியாகவா? அவரை துக்கப் படுத்தும்படியாகவா? நாம ஒரு சாட்சியாக வாழ்கிறோமா? இந்த உலகத்தில் நாம எல்லோரிடமும் வெளியரங்கமாக நன்றாக நடந்து நல்ல பெயர் வாங்கி விடலாம். ஆனால் அந்தரங்கத்தில் நம்முடைய உள்ளார்ந்த வாழ்கை எப்படி இருக்கிறது? "மனிதன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ உன் இருதயத்தைப் பார்க்கிறார்." இருதயத்தின் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகிற தேவனாக அவர் இருக்கிறாரே. அவருக்கே நாம கணக்கு கொடுத்தாகணுமே.

ஒரு நல்ல கிறிஸ்தவ ஜீவியம் வாழ்வதற்கு, இப்பூலோக வாழ்விலும் நாம் நீதியோடு நேர்மையோடு, உண்மையோடு உத்தமத்தோடு வாழ்ந்து ஆண்டவருடைய வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்தவும், மற்றவர்களை ஆதாயப்படுத்தவும், ஆண்டவருடைய சன்னிதானத்தில் நிற்கின்ற சமயத்தில் நம ஆவி ஆத்துமா சரீரம் அனைத்தும் குற்றமற்றதாக இருக்க எப்படி இருக்க வேண்டும், எப்படி நடக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை அறிந்து கொள்ள **"இயேசு கிறிஸ்து உன்னோடு பேசுகிறார்"** என்கிற புத்தகத்தைப் படித்துப் பாருங்கள். இப்புத்தகம் நாம் நடக்க வேண்டிய வழிகளை போதிக்கும்.

## ௨. கிறிஸ்தவர்களின் சந்தேகங்களுக்குப் பதில்

இயேசு கிறிஸ்துவை அறிகின்ற அறிவில், அவருடைய கிருபையில் நாம் அனுதினமும் வளரணும். அவர் பெருகி நாம

சிறுகணும். நம்மோட ஒவ்வொரு சொல்லும், செயலும், சிந்தனையும், சத்திய வேதத்தின் பிரகாரம் இருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் இன்று பல உபதேசக் குழப்பங்கள், பல பிரிவுகள், எல்லா பிரிவுகளும் பயன்படுத்துவது ஒரே ஒரு வேதாகமத்தைத்தான். ஆனால் அவைகளை புரிந்து கொள்ளுதலில், உபதேசிப்பதில், கடைப்பிடித்தலில்தான் எத்தனை எத்தனை வித்தியாசங்கள், குழப்பங்கள், எது சரியான சத்தியம்? கிறிஸ்துவுக்குள் வந்த பிறகும் சில பாரம்பரியக் கட்டுகளை (பழக்க வழக்கங்களை, நம்பிக்கைகளை) விடமுடியாமல் அவைகளை தொடர்ந்து செய்யும் அவலம், குழப்பநிலை இன்னும் இருக்கிறதே.

பொதுவாக கிறிஸ்தவர்களின் உள்ளத்தில் எழுகின்ற பல கேள்விகளுக்கு, குழப்பங்களுக்கு வேத சத்தியத்தின் அடிப்படையில் விளக்கம் பெற பைபிள் சார்ந்த பல விளக்க நூல்களை பல தேவ மனிதர்கள் எழுதியிருக்கின்றனர். அவைகளையும் நாம் படித்து, கற்றுத் தேறுகின்ற சமயத்தில் நாம் சரியான சத்தியத்தில் நிலை நிற்போம். பொதுவாக கிறிஸ்தவர்களின் உள்ளத்தில் எழும் குழப்பம், சந்தேகம் - இயேசு கிறிஸ்துவின் சிலையை, சிலுவையை, அவருடைய உருவம் கொண்ட படத்தை ஆராதிக்கலாமா? குழந்தை இயேசுவை ஆராதிக்கலாமா? மேரியை, அந்தோணியாரை, சவேரியாரை கும்பிடலாமா? முழுக்கு ஞானஸ்நானம் அவசியமா? தெளிப்பு ஞானஸ்நானம் மட்டும் போதாதா? அபிஷேகம் அவசியமா? அந்நிய பாஷை பேசினாத்தான் அபிஷேகம் இருக்குதுன்னு அர்த்தமா? முக்காடு போடணுமா? நகையை கழட்டணுமா? பூ, பொட்டை எடுக்கணுமா? வெள்ளைச்சேலை கட்டணுமா? காதலிச்சு கல்யாணம் பண்ணலாமா? அக்கா மகளை திருமணம் செய்யலாமா? கர்னாடிக் மியூசிக் கற்றுக் கொள்ளலாமா? தியானம் பழகலாமா? யோகா கற்றுக் கொள்ளலாமா? இதுபோன்ற இன்னும் பலவிதமான கேள்விகளுக்குப் பதில் தெரிந்து கொள்ள படியுங்கள் '**கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்கு பதில்.**'

## 3. என் ஊழியக்காரனே

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருமே பரிசுத்தமாக, கர்த்தருக்கு ஒரு சாட்சியாக, நீதியோடு நேர்மையோடு, உண்மையோடு, உத்தமத்தோடு வாழ்ந்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தணும். நம்மோட ஒவ்வொரு நடவடிக்கைகளிலேயும் இயேசு கிறிஸ்து வினுடைய சாயலை, நற்குணங்களை பிரதிபலிக்கணும். வெளிப்படுத்தணும். அதன் மூலமாக கர்த்தரோட நாமம் மகிமைப்படணும். நாம ஆராதிக்கக் கூடிய தேவன் மகா மகா பரிசுத்தர் என்று வேற யாரும் சொல்றதில்லை. நாம ஒருத்தர்தான் சொல்றோம். அப்படி ஒரு பரிசுத்த தேவனை ஆராதிக்கிற நாம எப்படி இருக்கிறோம் என ஊர் உலகம் நம்மை கண் கொத்திப் பாம்பாக பார்த்துக் கொண்டு இருக்கின்றனர்.

ஒரு விசுவாசியே எப்படி இருக்கணும்னு ஆண்டவர் சொல்கிறார். விசுவாசிகளை கிறிஸ்துவுக்குள் பலப்படுத்துகிற ஒரு ஊழியக்காரர், போதகர் எப்படி நடந்துக்கணும்? எப்படி இருக்கணும்? ஆண்டவர் இன்னும் உன்னிப்பாகக் கவனிப் பாரே, எதிர்பார்ப்பாரே. சபை விசுவாசிகள் மாத்திரமல்ல, ஊர் உலகத்திலிருக்கிற எல்லோருமே பாக்குறாங்களே. இந்தப் பிரபஞ்சத்தின் அதிபதியான சாத்தானுக்கு விசுவாசிகளின் மேல் இருக்கிற அக்கறையை விட ஒரு ஊழியக்காரன், போதகர் மேலேதான் இன்னும் அதிக கவனமாய் இருப்பான். ஒரு ஊழிக்காரரை கீழே விழ வச்சுட்டா, அந்த ஊழியமே படுத்துவிடுமே. அதுனால அவனுக்கு ஊழியக்காரர்கள் மீது ஒரு விசேஷித்த கண், கவனம் எப்போதும் இருக்கும். பிசாசுக்கு, அவனுடைய சதி வேலைகளுக்கு இடம் கொடாதபடி ஊழியக்காரர்கள் மிகவும் கவனமாக எச்சரிக்கை யாக இருக்க வேண்டும் என கர்த்தர் விரும்புகிறார். 'உத்தமன் என்று எண்ணி ஊழியத்தை, சுவிசேஷத்தை தேவன் ஊழியக்காரர்களிடத்தில் ஒப்படைத்துள்ளார்.' 'உங்கள் இருதயத்தை சோதித்து அறிகிற தேவனுக்கே பிரியமாக நடந்து கொள்ளுங்கள்' என்று 1 தெச 2:4 கூறுகிறது.

கிறிஸ்தவர்களுக்குப் பாடுகள் உண்டு. ஊழியக்காரர் களுக்கு பாடுகளும், உபத்திரவங்களும் இன்னும் அதிக மாகவே இருக்கும். அது அவர்களை பண்படுத்த, பக்குவப் படுத்த, ஆண்டவரை இன்னும் அதிகமாக, நெருக்கமாக கிட்டிச் சேரவே. இந்தப் பாடுகள் ஊழியக்காரர்களின் விசுவாசத்தை பலப்படுத்த வேண்டும். ஏனென்றால் அவர்களின் விசுவாசமே இந்த உலகத்தை ஜெயிக்கும். ஆரம்பம் அல்பமாக இருந்தாலும், முடிவு சம்பூர்ணமாக இருக்கும். அதற்குத் தேவை தொடர்ந்த இடைவிடாத ஜெபம். ஏனென்றால் இந்த தேசத்தின் எதிர்காலம் ஜெபிக்கின்ற ஊழியக்காரர்களின் கரங்களிலேயே இருக்கின்றது. ஊழியக்காரர்களின் ஜெபத்தை கர்த்தர் கேட்பார், கனம் பண்ணுவார். ஆண்டவர் கொடுத்த வரங்களை ஊழியக்காரர்கள் அனல் மூட்டி எழுப்ப வேண்டும்.

சபைகளில் ஏன் எழுப்புதல் இல்லை? 10, 15 ஆண்டுகளாக சபை நடத்தியும், விசுவாசிகளின் எண்ணிக்கை 60ஐ தாண்டவில்லையே ஏன்? அப்போஸ்தலர்கள் உயிரோடு வாழ்ந்த காலத்தில் ஒரே ஒரு கூட்டத்தில் 3000 பேர் இரட்சிக்கப்பட்டார்களே. இன்று ஏன் அதுபோன்ற அற்புதங்கள் நடைபெறுவதில்லை? அதே ஆவியானவர்தானே? பின் ஏன் அப்படி நடைபெறவில்லை. குறை ஆண்டவரிடம் இல்லை. குறை நம்மிடம்தான். அந்தக் குறைகளை அறிந்து அவைகளை எடுத்துப் போட்டு முழு அர்ப்பணிப்போடு, ஜெபத்தோடு கர்த்தரின் ஊழியத்தை செய்கின்ற சமயத்தில் சபைகளில் நிச்சயம் ஒரு பெரிய எழுப்புதல் ஏற்படும். தேவனுக்கு ஊழியம் செய்கிற ஊழியக்காரர்கள் எப்படி இருக்க வேண்டும், எப்படி செயல்பட வேண்டும், எவ்வளவு பரிசுத்தமாக, நீதியோடு, நேர்மையோடு நடக்க வேண்டும் என்றும், சபை விசுவாசிகள் ஒவ்வொருவரின் திறமைகளையும் அறிந்து, அவர்களுக்கேற்ற ஊழியப் பயிற்சிகளைக் கொடுத்து, மிஷனெரிகளாக உருவாக்க வேண்டும் என்றும், அறிந்து கொள்ள **'என் ஊழியக்காரனே'** என்கிற புத்தகத்தை படித்துப் பாருங்கள்.

ஆண்டவருக்கு ஊழியம் செய்கின்றபோது தேவன் அவர்களை கனப்படுத்துவார். முத்திரை மோதிரமாக எடுத்துப் பயன்படுத்துவார். அநேகருக்கு ஆசீர்வாதமாய், அதிகாரியாய் வைப்பார். அறியாதிருக்கிற ஜாதிகளை வரவழைப்பார். பரலோகத்தின் திறவுகோல்களையே ஊழியக்காரர்களின் கரங்களில் தருவார். கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவன், தேவனுக்குப் பிரியனும், மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவனுமாய், என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் வான மண்டலத்தின் நட்சத்திரங்களைப் போல் பிரகாசிக்கப் பண்ணுவார். ஊழியக்காரர்களை அனல் மூட்டும் ஒரு நூல் **'என் ஊழியக்காரனே.'**

## 4. நீங்களே எனக்கு சாட்சிகள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவரை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு எண்ணி மாளாத அற்புதங்களையும் அதிசயங்களையும் இன்றும் செய்து கொண்டே இருக்கிறார். *'கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவு படாது'* என்று வேதம் கூறுகிறது. அதற்கு *'நீங்களே சாட்சி'* என்று ஆண்டவன் கூறுகிறார். ஒரு தேவதூதனையோ, சேராபீன்கள், கேராபீன்களைப் பார்த்தோ அவர் இந்த வார்த்தையைக் கூறவில்லை. மண்ணான மனுஷனான நம்மைப் பார்த்துத்தான் கர்த்தர் கூறினார். அவர் செய்த நன்மைகளுக்கு நாம சாட்சியா நிக்கணும், சாட்சி சொல்லணும், சாட்சியா வாழணும். அதன் மூலம் அவருடைய நாமம் மகிமைப்படணும். அதுதான் நாம் அவருக்கு திருப்பி செய்யக் கூடிய, செய்ய வேண்டிய காரியம். இதை எத்தனை பேரு செய்கிறோம்? அப்படியே சாட்சி சொன்னாலும், எங்கே சொல்றோம்? நாலு சுவற்றுக்குள்ளே, சர்ச்சுக்குள்ளே கிறிஸ்தவங்கிட்ட, சொல்லுறோம். வெளியிலே போயி எங்கேயாவது சொல்றோமா? இயேசுவை அறியாத, ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிற புற ஜாதி மக்களுக்கும் அற்புதம், சுகம், பிரச்சினைக்கு தீர்வு, ஒரு விடுதலை தேவைப்படுதே. ஜனங்கள் தேடும் நிம்மதியை இயேசு த

ருகிறார்னு யாரு போயி அவங்ககிட்ட சொல்லுவாங்க? அவரிடமிருந்து அற்புதங் களைப் பெற்றுக் கொண்ட நாமதானே அவங்ககிட்ட சொல்லணும்? சொல்லியிருக் கிறோமா? ஆண்டவர் நமக்கு, நம்ம குடும்பத்தில், நம்மோட பிள்ளைகளின் வாழ்க்கையிலே செய்த நன்மைகளை, கொடுத்திருக்கிற சந்தோஷம், சமாதானம், விடுதலையை, நம்ம திருச்சபையில, எத்தனையோ பேர் சொல்ற சாட்சிகளை எல்லாம் வெளியிலேயே போயி சொல்லணும். அதை ஒரு டிராக்சா வெளியிடணும். ஒரு புத்தகமா, ஒரு விசிடியா வெளியிடணும். ஆண்டவர் செய்த அற்புதங்களை பைபிள்ல நாலு சுவிசேஷ புத்தகத்திலேயும் எழுதி வைக்கலைன்னா நமக்கெல்லாம் தெரிஞ்சிருக்குமா?

வெறுமே சாட்சியா சொன்னா மாத்திரம் போதாது. ஒரு சாட்சியாகவும் வாழணும். ஊர் உலகம் நம்மைப் பார்த்துக்கிட்டு இருக்குதே. நம்மோட இனத்தார், ஜனத்தார், அக்கம் பக்கத்தில இருக்கிறவங்க, நண்பர்கள், கூட வேலை பாக்குறவங்க, எல்லோரும் நம்மை, நம்மோட வாழ்க்கையை, நாம நடந்துக்கிடுற விதத்தை, நம்மோட பேச்சுகளை, செயல்களை, குணாதிசயங்களை பாக்குறாங்களே. கணவன் - மனைவி உறவு, மாமியார் - மருமகள் உறவு, பிள்ளைகளை எப்படி வளர்க்கிறோம்? எப்படி குடித்தனம் நடத்துறோம், வீட்டை எப்படி மெயின்டெய்ன் பண்றோம் எல்லாத்தையும் ரொம்ப உன்னிப்பா கவனிப்பாங்களே. நாம படிக்கிறது ஒண்ணு, நடக்கிறது வேறையா இருந்தா அங்கே சாட்சி இல்லையே. அங்கே கர்த்தரோட நாமம் தூஷிக்கப்படுதே. அப்படி சாட்சியாக வாழ்ந்து ஆண்டருடைய திருக்கரங்களிலிருந்து பலவிதமான அற்புதங்களை பெற்றுக் கொண்டவர்களின் சாட்சிகளை **'நீங்களே எனக்கு சாட்சிகள்'** என்கிற புத்தகத்தில் காணலாம். வாங்கி படியுங்கள். அது உங்கள் விசுவாசத்தை வர்திக்கப் பண்ணும்.

## 5. இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?

முதல் நூற்றாண்டிலேயே 30 லட்சம் கிறிஸ்தவர்கள் இந்தியாவில் இருந்தார்கள் என்று விவேகானந்தர் ஞானதீபத்தில் எழுதியிருக்கிறார். முதல் நூற்றாண்டில் நம்ம தேசத்தில் என்ன ஜனத்தொகை இருந்திருக்கும்? ஒரு 50, 60 லட்சம் இருந்திருக்கும். அதில் 30 லட்சம் கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவம் என்கிற பெயர் மேலை நாடுகளில் பரவுறதுக்கு முன்னாடியே அது நமது தேசத்தில் தழைத்தோங்கி செழித்து இருந்ததுன்னு டாக்டர் ராதாகிருஷ்ணன், டாக்டர் ராஜேந்திர பிரசாத், டாக்டர் அம்பேத்கார், டாக்டர் ஜவஹர்லால் நேரு போன்ற பல தேசத் தலைவர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்த 30 லட்சம் கிறிஸ்தவர்களும் திருமணம் செய்து செய்து, குழந்தை குட்டிகள் பெற்று பேரக் குழந்தைகளை பெற்றெடுத் திருந்தால் இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடாக இருக்கணும். ஆனா இன்னிக்கு அஃபிஷியலாப் பாத்தீங்கன்னா, கிறிஸ்தவர்களின் ஜனத்தொகை நம்ம தேசத்தில் 3 - 4% கூட இல்லை. அன் அஃபிஷியலா அதிகமா இருக்கலாம். ஆனா தேசமே ஒரு கிறிஸ்தவ நாடாக இருக்கிறதுக்குப் பதிலாக நாம ரொம்ப கம்மியாகவே, நாம ஒரு மைனாரிட்டியாகவே இருக்கிறோம். ஏன்? என்ன காரணம்?

கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாக இல்லை. ஊழியக்காரர்கள் நல்ல ஊழியக்காரர்களாக, உண்மை, உத்தமம், நீதி, நேர்மை யுள்ளவர்களாக இல்லை. திருச்சபைகள் என்ன செய்யணுமோ, அவைகளை செய்யவில்லை. கிறிஸ்தவ விசுவாசிகளிடம் ஒரு சாட்சியுள்ள வாழ்க்கை இல்லை. சுவிசேஷ பாரம் இல்லை. சுவிசேஷத்தை எப்படி அறிவிக்கணுமோ அப்படி அறிவிப்பது இல்லை. திருச்சபைகள் சீஷத்துவ பயிற்சி அளிப்பது இல்லை. மிஷனெரிகளை உருவாக்குவதில்லை. சப்போர்ட் செய்வ தில்லை. சபைகளின் எண்ணிக்கைக்கோ, போதகர்கள், ஊழியக்காரர்களின் எண்ணிக்கைக்கோ, பைபிள் காலேஜ்,

மிஷனெரி ஸ்தாபனங்களுக்கோ எந்த பஞ்சமும் இல்லை. ஆனா நமது தேசம் இன்னும் முழுமையாக சந்திக்கப் படவில்லை. இயேசு கிறிஸ்துவின் நாமத்தையே கேள்விப் பட்டிராத எத்தனையோ கிராமங்கள், மலைவாழ் மக்கள், ஆதிவாசிகள், பழங்குடி மக்கள் இன்னும் நம் தேசத்தில் இருக்கின்றனர். 10, 12 கிராம சுற்றுவட்டாரத்தில் ஒரு திருச்சபை கூட இல்லாத எத்தனையோ பகுதிகள் நம் தேசத்தில் இருக்கின்றன.

இந்து மதத்தின் மேஜர் பிரிவுகளாகக் கருதப்படும் சைவம், வைணவம் உருவானதே கிறிஸ்தவத்தின் அடிப்படையில்தான் என்று சமய வரலாற்று ஆசிரியர்கள் ஆராய்ந்து தெளிவாகக் கூறியிருக்கின்றனர். திருக்குறள், தேவாரம், திருவாசகம், நாலு வேதங்கள் மற்றும் அநேக இந்து மத, வேதங்களில், உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டு இருப்பதெல்லாமே இயேசு கிறிஸ்துவைக் குறித்துத்தான் என்று ஆதாரபூர்வமாக நிரூபித்து, பல பாடல்களின் விளக்கத்தோடு **‘உண்மையான கடவுள் யார்’, ‘இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து - பாகம் 1 & 2’, ‘திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி’, ‘சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்’, ‘நாலு வேதங்களின் நாயகர் இயேசுவே’, ‘இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு’, ‘இந்தியாவின் ஊழிய உயர்வுக்கு ஒரு புதிய பார்வை’, ‘தமசோமா ஜோதிர்கமய’** போன்ற புத்தகங்களும், **‘சைவமும், வைணவமும் கிறிஸ்தவமும்’, ‘முக்திக்கு வழி கிறிஸ்தவமே’, ‘தேசம் சந்திக்கப்படணும் கர்த்தாவே’, ‘எழுந்து காட்டுவோம் வாருங்கள்’** போன்ற VCD களும், **‘இது உயிர்காக்கும் முயற்சி’, ‘மோட்சம் செல்லும் வழி’, ‘ஓர் அவசர அறைகூவல்’** போன்ற புத்தகங்களும் உள்ளன. சுவிசேஜத்தை எப்படி அறிவிப்பது என்பது குறித்து **‘பரலோகம் செல்ல எளிதான வழி’**, ஆஸ்பத்திரி ஊழியத்துக்கென்று **‘அற்புத சுகமளிக்கும் வைத்தீஸ்வரர் இயேசு’, ‘தெய்வீக சுகம் உண்டா?’** போன்ற புத்தகங்களும், உள்ளன. கிறிஸ்தவர்கள் மதமாற்றம் செய்யவில்லை. கிறிஸ்தவம் ஒரு மதமே அல்ல. அது ஒரு மார்க்கமே என்று விளக்கம் கூறி **‘கர்வாப்சி - மதமாற்றம் எனும் மாயை’** என்று ஒருவர் எழுதிய ஒரு

நூலும் கூட இருக்கிறது. இவைகளை எல்லாம் வாங்கி பொறுமையாகப் படித்துப் பாருங்கள். இந்தப் புத்தகங்கள் உங்களுக்கு சுவிசேஷ பாரத்தை, அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காக திறப்பின் வாசலில் நின்று கண்ணீர் விட்டு கதறும் நொறுங்குண்ட இருதயத்தை உங்களுக்குத் தரும்.

## 6. கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு

நம்மைச் சுற்றி எத்தனையோ கத்தோலிக்க சகோதரிகள், சகோதரர்கள், பங்குத் தந்தைகள் இருக்கின்றனர். அவர்களின் பக்திக்கு ஈடு இணையே கிடையாது. தங்களுடைய வாழக்கையையே ஆண்டவருக்கு என்று அர்ப்பணம் செய்து திருமணமே செய்து கொள்ளாமல் கன்னியாஸ்திரிகளாக, பங்குத் தந்தைகளாக இருக்கின்றனர். அவங்க நிர்வகிக்கின்ற ஸ்கூல்ஸ், காலேஜஸ், கான்வென்ட்டுகள், தேவாலயம், அனாதை ஆசிரமம், ஓல்டு ஏஜ் ஹோம்ஸ், சமூக சேவை நிறுவனங்கள், ஆஸ்பத்திரிகள் எல்லாமே அவ்வளவு நீட்டாக, கிளீனாக, பெர்ஃபெக்ட்டா எந்தக் குறையுமே சொல்ல முடியாத அளவுக்கு அவ்வளவு பிரமாதமாக இருக்கும். மத்தவங்க யாருமே அவங்க பக்கத்தில கூட போக முடியாத அளவுக்கு சகலத்தையும் ஒழுங்கும், கிரமுமாக செய்வார்கள். ஆனா இது மாத்திரமே அவர்களை பரலோகம் கொண்டு போயி சேர்த்திடுமா?

ஆண்டவர் தம் கைப்படவே முதல் மனுஷனை உண்டாக் கினார். மண்ணைப் பிசைந்து தம்முடைய சாயலிலேயே உருவாக்கினார். தம்முடைய ஜீவ சுவாசத்தையே அவனுக்கு கொடுத்து ஜீவாத்துமாவாக உருவாக்கினார். அவன் சும்மா இருந்தா சோம்பேறியா போயிடுவான்னு ஏதேன் தோட்டத்தை உருவாக்கிக் கொடுத்து, அதைப் பண்படுத்தி பொழைச்சுக்கோ என்றார். அவன் தனியா இருக்கிறது நல்லது இல்லை என்று எண்ணி அவனுக்கு துணையாக ஏவாளை உருவாக்கிக் கொடுத்தார். நல்ல நிழல் கொடுக்கும், கனி கொடுக்கும்

மரங்களை உருவாக்கிக் கொடுத்தார். தண்ணீர் தேவைப் படுமேன்னு ஆறுகளையும், நதிகளையும் ஏதேன் தோட்டத்துக் குள்ளேயே கொண்டு வந்தார். ஏதேன் தோட்டமே உன்னோடதுதான்.

இந்த தோட்டத்துக்குள்ளே நீ எங்கே வேண்டுமானாலும் போகலாம். எந்த மரத்தினுடைய கனிகளையும் பறிச்சு புசிக்கலாம். ஒரே ஒரு கண்டிஷன், நன்மை தீமை அறியத் தக்கதாக உள்ள அந்த ஒரே ஒரு மரத்தினுடைய கனியை மாத்திரம் புசிக்காதே. மற்றபடி நீ எங்கேயும் போகலாம், வரலாம், என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று முழு சுதந்திரம் கொடுத்தார். ஆண்டவர் சொன்ன அந்த ஒரே ஒரு கட்டளையை மீறியதின் நிமித்தம் சகலத்தையும் இழந்து போயிட்டாங்க. ஆண்டவரோட அன்பை, அரவணைப்பை, பாதுகாப்பை, அவர் கொடுத்த ஏதேன் தோட்டத்தை, மரணமில்லாப் பெரு வாழ்வாகிய, நித்ய ஜீவனையே அவங்க இழந்தது மாத்திரமல்ல, அவங்களோட பரம்பரையான நம்மையும் அந்த நித்ய ஜீவனை இழக்கும்படி செஞ்சுட்டாங்க. நிறைய கீழ்ப்படியாமையினால அல்ல, ஒரே ஒரு கீழப்படியாமையினாலே.

இன்னிக்கு அவங்களே உருவாக்கின கத்தோலிக்க பைபிளுக்கு புறம்பா என்ன என்னவெல்லாம் செஞ்சுக்கிட்டு இருக்கிறாங்க என்பதை தெரிந்து கொள்ள **'கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு'** என்று இரண்டு பாகமாக எழுதப் பட்டிருக்கும் புத்தகத்தை வாங்கிப் படித்து விட்டு அவர்களுக்கும் கொடுங்கள்.

மெய் சத்தியத்தை அறிந்து கத்தோலிக்கத்திலிருந்து வெளியே வந்துள்ள பல பங்குத் தந்தைகள், கன்னியா ஸ்திரீகளின் சாட்சிகளும் அந்த புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன. இயேசு கிறிஸ்துவை அறியாத, எதிர்க்கின்ற புற ஜாதி மக்களையாவது எளிதாக கிறிஸ்துவுக்குள் வழிநடத்தி விட முடியும். ஆனா மேரியின் பிடியில் இருக்கிற இந்த

கத்தோலிக்கர்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவது என்பது பெரிய காரியம் இல்லை. ஜெபத்தோடு ஆகமங்களைக் வேத சத்தியத்தை அறிவிப்பவர்கள். ஒருவரும் கெட்டுப் போவது தேவ சித்தமல்ல. அவர்களும் இரட்சிக்கப்படணும் என்கிற ஆதங்கத்தில் எழுதப்பட்ட நூல்கள் இவைகள்.

## 7. பாவப்பரிகாரிகளின் பங்கில்லா அங்கங்கள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்தப் பிரபஞ்சத்தையும் அதிலுள்ள சகலத்தையும் படைத்தார். சகல ஜீவ ராசிகளையும், மனிதனையும் படைத்து அனைத்தையும் ஆண்டு கொள் என்று கூறினார். மனிதன் பாவத்தில் விழுந்து அவர் அருவருக்கின்ற சகல அக்கிரமங்களையும், அநீதிகளையும் செய்து தேவ மகிமை அற்றவனாக ஆகிப் போனான். அவரே சிருஷ்டித்த மனுக்குலத்தை மீட்பதற்காக கடவுளே மனித அவதாரம் எடுத்து வந்தார். இரத்தத்தால் செய்த பாவத்தை பாவமே இல்லாத இரத்தம் சிந்தித்தான் பாவ விமோசனம் கொடுக்க முடியும் என்று எல்லா வேதங்களுமே சொல்லுது. ஆகவே இறைவனே பலியாக் ரத்தம் சிந்தினால் தான் மனுக்குலம் மீட்கப்பட முடியும். அதற்காக இறைவனே இயேசுவாக மனித அவதாரம் எடுத்து வந்து கல்வாரி சிலுவையிலே கடைசி சொட்டு இரத்தம் வரை சிந்தி மனுக்குலத்திற்கு பாவ விமோசனம் கொடுத்தார்.

மனிதர்கள் செய்த ஒவ்வொரு பாவங்களுக்காகவும் இயேசுவின் உடலில் உள்ள ஒவ்வொரு அங்கங்களுமே பாடுபாடுகள் பட்டன. உச்சந்தலையில் இருந்து உள்ளங் கால்கள் வரை சித்திரவதைகளை அனுபவித்தது. நமது சிந்தனையில் இருந்த அக்கிரம எண்ணங்களுக்காக அவருடைய சிரசில் முள் முடி தாங்கினார். அவர் தலையில் குட்டினர் காவலர்கள். எளியவர்களைக் கேலி செய்து ஏளனம் பண்ணி துன்பப்படுத்தியதற்காக இயேசுவின் கன்னம் அறைந்தனர் காவலர்கள். அந்த தேவாதி தேவனின் முகத்தில் காறித்

துப்பினர். கண்கள் கட்டப்பட்டு, சிரசில் குட்டப்பட்டு, இப்போது யார் குட்டினார்கள் என்று சொல் என்று கேலி, ஏளனம் செய்யப்பட்டார். நமது கைகளால் செய்த பாவங்களுக்காக அவருடைய இரண்டு கரங்களிலும் கூரிய ஆணிகள் கடாவப்பட்டன. மாம்ச இச்சைகளுக்கு, சிற்றின்பங்களுக்கு இலக்கான இந்த சரீரப் பிரகாரமான பாவங்களுக்காக அவருடைய பொன்னான உடம்பு சவுக்கினால் பிய்க்கப்பட்டு உழுத நிலம் போல ஆகியது.

நம் இருதயத்தில் கொண்ட பாவ சிந்தனை, கோபம் எரிச்சல், பழிவாங்கும் நினைவு, வம்பு, வீம்பு, வைராக்கியம், துரோகம், பொறாமை, வஞ்சக எண்ணங்களுக்காக அவருடைய விலாவில் குத்தப்பட்ட ஈட்டி இருதயம் வரை சென்று பாய்ந்தது. நமக்கு பாவ விமோசனம் ஈந்தது. போகக் கூடாத இடங்களுக்கு பாவம் செய்ய நம் கால்கள் தீ விரித்ததால் அவருடைய கால்களில் ஆணிகள் கடாவப்பட்டன. இப்படி அந்த சர்வ வல்ல சர்வேஷ்ரரின் சரீரம் நம்முடைய அக்கிரமங்கள், மீறுதல்கள், பாவங்களுக்காக படாதபாடுகள், அவமானம், நிந்தனை, சித்திரவதைகளை அனுபவித்தது. அவர் நமக்காக பட்டு அனுபவித்த கொடுமைகளை நினைத்தால், அவைகளை சற்றே இருதயத்தில் ஆழ்ந்து எண்ணிப் பார்த்து தியானித்தால் கண்களில் இரத்தமே வடியும். எப்பேர்ப்பட்ட கடின இருதயமும் நொறுங்கும். நமக்கு சந்தோஷம், சமாதானம், வெற்றியை தருவதற்காக அவர் சமாதானம் இழந்தார். சந்தோஷம் இழந்தார்.

நாம் மரணத்தை ஜெயிக்க, நித்ய ஜீவனைப் பெற்றுக் கொள்ள அவர் மரணத்தை ஏற்றுக் கொண்டு மீண்டும் உயிர்த்தெழுந்து நம்மையும் வெற்றி சிறக்கப்பண்ணினார். நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, நமது நோய்களையும், பலவீனங்களையும் அவர் சிலுவையில் சுமந்து தீர்த்து விட்டார். அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். அவருடைய சிலுவைப்பாடுகளை நாம் அனுதினமும் தியானித்தால், நமக்காக அவர் பட்ட பாடுகளை நினைவுகூர்ந்து அவைகளை

நம் சிந்தையில் பதித்து வைத்தால் அது நம்மை பாவம் செய்யாதபடி தடுத்து நிறுத்தும். அந்தப் பாடுகள் நம்மை பண்படுத்தும், பக்குவப்படுத்தும், பரிசுத்தப்படுத்தும். நம்மை பரலோக பிரஜையாக, நீதிமானாக மாற்றும். உங்கள் தியான, ஜெப வாழ்வை அனல் மூட்டி எழுப்ப **'பாவப் ப்ரிகாரியின் பங்கமில்லா அங்கங்களின்'** இரண்டு பாகங்களையும் படித்துப் பாருங்கள்.

## 8. பரலோகம் செல்ல எளிதான வழி

இந்த பூலோக மனித வாழ்வு 70, 80 ஆண்டுகள் மாத்திரமே. இந்த இம்மை வாழ்விற்குப் பிறகு ஒரு மறுமை வாழ்வு இருக்கிறது. நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தில், மண்ணால் ஆன இந்த சரீரம் மண்ணுக்கே திரும்பவும் செல்லுகிறது. ஆண்டவர் கொடுத்த ஆவி அவரிடமே திரும்பவும் செல்லுகிறது. ஆத்துமா அழிவில்லாதது. இந்த பூலோக வாழ்வில் நாம செய்துள்ள நன்மை தீமைக்கு ஏற்ப மறுமையில் நாம் நியாயத்தீர்க்கப்படும் வரை ஒண்ணு பரதேசிலே இருப்போம். இல்லையேல் பாதாளத்தில் கிடந்து அவஸ்தைப் படுவோம். நியாயத் தீர்ப்பில் அவனவன் செய்த நன்மை தீமைக்கு ஏற்ப தீர்ப்பு வழங்கப்படும். எல்லோருக்குமே பரலோகம் போகணும் என்கிற ஆசை இருக்கிறது. ஆனால் அங்கே போவோமா என்பதுதான் பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது.

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதால் மாத்திரமே ஒருவர் பரலோகம் போய்விட முடியாது. *'நீங்கள் கறையற்றவர்களும், பிழை இல்லாதவர்களுமாக அவருடைய சந்நிதானத்தில் காணும்படி ஜாக்கிரதையாக இருங்கள்'* என்று II பேதுரு 3:14 கூறுகிறது. அதோடு *'உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாக இருக்கும்படி காத்துக் கொள்வீர்களாக'* என்று 1 தெச 5:23 கூறுகிறது. *'மரண பரியந்தம் உண்மையாக இரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்கு நான் தருவேன்'*னு வெளி 2:10 லேயும், *'ஜெயங் கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு வெண் வஸ்திரம்*

தர்ப்பிக்கப்படும். ஜீவ புத்தகத்திலிருந்து அவனுடைய பெயரை நான் கிறுக்கிப் போடாமல் பிதாவின் முன்பாக அறிக்கை செய்வேன்' என்று இயேசு கிறிஸ்து வெளி 3:5 இல் சொல்லி இருக்கிறார்.

'சத்தியத்தை அறிகின்ற அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாக பாவம் செய்கின்றவர்களாக இருந்தால், அந்த பாவங்களின் நிமித்தம் செலுத்தத்தக்க பலி யாதொன்றும் இல்லாமல் நியாயத் தீர்ப்பும் விரோதிகளைப் பட்சிக்கின்ற கோபாக்கினையும் நம்மீது வரும். மோசேயின் நியாயப் பிரமாணத்தை தள்ளுகின்றவன் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாவான்' என்று எபி 10:26, 28 கூறுகிறது. 'ஒருவன் நியாயப் பிரமாணம் முழுதும் கைக் கொண்டிருந்தும், ஒன்றே ஒன்றில் தவறினாலும் எல்லாவற்றிலும் குற்றவாளியாக இருப்பான்'னு யாக் 2:10 கூறுகிறது. இப்படி இன்னும் எத்தனையோ வசனங்கள் இருக்கின்றன. பெரிய பெரிய தேவ மனிதர்களே ஒரே ஒரு கீழ்படியாமைக்காக விழுந்து போயிருக்கிறார்கள். அப்படி விழுந்தவர்கள்தான் மோசே, ஆண்டவர் படைத்த முதல் மனுஷன் ஆதாம், ஏவாள், சிம்சோன் போன்றோர். ஆபிரஹாம் சொன்ன ஒரே ஒரு பொய்யினால் அவரோட கம்ப்ளீட் பரம்பரையே பொய்யர்களாக மாறிவிட்டனர்.

பரலோகம் செல்வது என்பது அவ்வளவு லேசான காரியம் இல்லை. அழைக்கப்பட்டவர்கள் அநேகர். தெரிந்து கொள்ளப்பட்ட வர்களோ வெகு சிலரே. பரலோகம் செல்லும் பாதை மிகவும் இடுக்கமானதும், நெருக்கமானதும் ஆகும். பரலோகம் செல்ல ஒரு எளிதான வழி இருக்கிறது. யார் பரலோகம் போவார்கள்? நான் 10 வருஷங்களாக திருச்சபை செல்கிறேன், நான் பரம்பரைக் கிறிஸ்தவன், நான் முழுகி ஞானஸ்நானவம் பெற்று விட்டேன். அபிஷேகம் பெற்றிருக்கிறேன். அந்நிய பாஷை பேசுகிறேன். பூ, பொட்டு, நகை நட்டு, தாலி எல்லாம் எடுத்து விட்டேன். பெயரை மாற்றிவிட்டேன். வெள்ளைச் சேலை கட்டியிருக்கிறேன்

நினைப்பவர்கள் அல்ல. வேற யார் பரலோகம் போவார்கள்? அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என அறிந்து கொள்ள 'பரலோகம் செல்ல எளிதான வழி', 'இது உயிர் காக்கும் முயற்சி', 'பரலோகம் செல்லும் பாதை' என்ற புத்தகங்களையும் 'முக்திக்கு வழி கிறிஸ்தவமே', 'எழுந்து கட்டுவோம்', 'தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தரே' என்கிற விசிடிகளையும் பாருங்கள்.

## 6. யஹோவா சாட்சிகளின் துர் உபதேசங்கள்

தேசம் எப்படியாவது சந்திக்கப்படணும். நமது தேசம் கர்த்தருக்கு சொந்தமாகணும். சுவிசேஷம் அனைவருக்கும் அறிவிக்கப்படணும். 'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியவும் அவர் சித்தமுள்ளவராக இருக்கிறார்' என்று கிறிஸ்தவர்களும், ஊழியக்காரர்களும், போதகர்களும் படாத பாடுகள் படுகிறோம். முழங்கால் படியிட்டு ஜெபிக்கிறோம், திறப்பின் வாசலில் நிற்கிறோம். நாம் எவ்வளவு பாடுகள் படுகிறோமோ அதற்கு ஒரு படி மேலாக இந்த லோகத்தின் அதிபதியும் அவன் சேனைகளும் முனைந்து செயல்படுகின்றனர். குறிப்பாக இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களைக் குழப்பி, தவறான உபதேசத்தை கடைப்பிடிக்க வைத்து நம்மை பரலோகம் சென்று விடாதபடி தடுக்க என்னவெல்லாம் செய்யணுமோ அதையெல்லாம் செய்து விடுகின்றனர். அதில் மிக வேகமாக, துடிப்புடன் செயல்படுகிறவர்களே இந்த யஹோவா சாட்சிகள். மூளைச் சலவை செய்வதில் கில்லாடிகள். பத்து தடவை பைபிளை கரைத்துக் குடித்தவர்களைக் கூட 30 நிமிடங்களில் குழப்பி அவர்கள் சொல்வதைக் கேட்கும் நிலைக்கு கொண்டு வந்து விடுவார்கள். நாம் மறுத்து ஒரு வசனம் சொன்னால், அடுத்த வினாடி அதற்குப் பதிலடியாக பத்து வசனங்களை, பைபிளிலிருந்து எடுத்துச் சொல்லும் அளவுக்கு அவர்களுக்கு பக்கா டிரெயினிங் கொடுக்கப் படுகிறது.

இதில் கொடுமை என்னவென்றால் நம்ம கிறிஸ்தவர்களில் அநேகர் பைபிளை தினமும் படிப்பதில்லை. சபையில் போதகர்

கூறும் வசனங்களை ஒரு நோட்டில் எழுதி, அதை வீட்டில் அப்புறம் பார்த்து, பைபிளோடு திரும்பவும் தியானிப்பது இல்லை. திருச்சபையில் பைபிள் ஸ்டடி வைத்தால் வருவது கிடையாது. *'என் ஜனங்கள் வேத அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்'*. என்று ஓசியா 4:6ல் ஆண்டவர் வேதனைப்படுவது போல வேதனைப்பட வேண்டியிருக்கிறது. 10 ஆண்டுகளாக கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள்கூட ஒரு தடவை முழுமையாக பைபிளை படித்திருக்க மாட்டார்கள். வெறும் பேர்க் கிறிஸ்தவர்களாக, வெறும் பெயரில் கிறிஸ்தவர்களாக, சண்டே கிறிஸ்தவர்களாக மட்டுமே அநேகம் பேர் இருக்கின்றனர் என்பதே நிதர்சனமான நிலமை. இந்த நிலமை சாத்தானுக்கு மிகவும் சாதகமான ஒரு சூழ்நிலை. ஒரு நிமிஷத்தில நம்மளை கவிழ்த்தி விடுகிறான். இதுதான் இன்று நமது தேசத்தில் நடந்து கொண்டிருக்கிறது.

யகோவா சாட்சிகள் என்ன சொல்லி நம்மை குழப்புவார்கள். அவர்களுக்கு எப்படி பதில் சொல்வது என்று **'யாகோவா சாட்சியின் உபதேசங்களும் அதற்கு பைபிள் கூறும் பதிலும்'** என்று மூன்று பாகங்கள் இருக்கிறது. அதை வாங்கிப் படித்து நம்மை யாரும் தவறான உபதேசத்திற்குள் இழுத்து விடாதபடிக்கு பலப்படுத்திக் கொள்வது மிகவும் அவ:சியம். பொதுவாக திருச்சபையில் 'இதுபோன்ற கள்ள தீர்க்கதரிசிகள், துர் உபதேசக்காரர்கள் வீட்டிற்கு வந்தால், அவர்களுக்கு ஒரு குவளை தண்ணீர் கூட கொடுக்காதீர்கள். ஸ்தோத்திரம் கூட கூறாதீர்கள். அடித்து விரட்டுங்கள்' என்றே போதிக்கப்படு கிறது. ஆனால் இது ஒரு தவறான அணுகுமுறை.

ஒரு இந்து சகோதர சகோதரியிடம் சுவிசேஷத்தை நாம் அறிவித்து அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும், அவர்கள் அடுத்தவர்களிடம் போய் நீங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளாதீர்கள் எனக் கூற மாட்டார்கள். ஆனால் இந்த யகோவா சாட்சிகளை நீங்கள் வெளியே விரட்டினால், அவர்கள் இரட்சிக்கப்பட்ட இன்னொரு

கிறிஸ்தவர்கள் வீட்டிற்கே போவார்கள். அவர்கள் எந்த இந்துக்களின் வீட்டிற்கும் போய் சுவிசேஷத்தை அறிவிப்பது இல்லை. இரட்சிக்கப்பட்டவர்களை குழப்புவதே அவர்களின் வேலை. அவர்கள் ஒரு கேன்சர் நோய் போல. அதனால் அவர்களை விரட்டியடிக்கக் கூடாது. அவர்களுக்கு எப்படியாவது மெய்யான சத்தியத்தை அறிவித்து, அவர்களையும் கிறிஸ்துவுக்குள் நாம் வழி நடத்த வேண்டும். அது அவ்வவளவு லேசான காரியம் அல்ல. ஆனால் நாம் மந்தையைக் காக்க கண்டிப்பாக செய்ய வேண்டிய ஒரு காரியம் இது.

யகோவா சாட்சிகளை வாதத்தில் வெல்வது மிகவும் கடினம். ஏனென்றால், நாம் என்ன என்ன மறுப்பு சொல்லுவோம், எதிர்வாதம் செய்வோம், அதற்கு அவர்கள் என்ன பதில் சொல்ல வேண்டும் என்றெல்லாம் பக்கா டிரெயினிங் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் எதையும் சிந்திப்பதே கிடையாது. இந்தக் கேள்விக்கு இது பதில் என்பதுபோல் மனப்பாடம் செய்து வைத்திருப்பார்கள். அவர்கள் சார்ந்து இருப்பது, பின்பற்றுவது ஒரு துர் உபதேசம் என்று அவர்களுக்குப் புரிய வைக்க, அவர்களை சிந்திக்க வைக்க வேண்டும். அவர்களால் பதிலே சொல்ல முடியாத அளவுக்கு அவர்களிடம் கேள்விகளைக் கேட்க வேண்டும். அதற்கு **'யகோவா சாட்சிகளுக்கு எப்படி சத்தியத்தை அறிவிப்பது'** என இரண்டு பாகங்கள் இருக்கிறது. இந்தப் புத்தகங்களை அவர்களிடம் அப்படியே கொடுத்து விடாதீர்கள். முதலில் நீங்கள் அவைகளை நன்கு படித்து, புரிந்து கொண்டு, நோட்ஸ் எடுத்து வைத்துக் கொண்டு தினமும் ஒவ்வொரு கேள்வியாக கேட்டு அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். அதற்கு நீடிய பொறுமை, ஜெபம் அனைத்தும் அவசியம். நாம் துர் உபதேசத்திற்கு பலிகடாவாக ஆகாமல் இருக்கவும், நமது மந்தையைக் காக்கவும், சாத்தானின் தூதர்களாக செயல்படும் அவர்களும் இரட்சிக்கப்பட்டு, மற்றவர்களைக் கெடுக்காமல் தடுக்கவும் இந்தப் புத்தகங்கள் உதவும்.

## 14. இஸ்லாமியரின் கேள்விகளுக்குப் பதில்

கிறிஸ்தவத்திற்கு மற்றொரு வலிமையான எதிரி இஸ்லாமியர்கள். சாத்தான் அவர்களையும் மிக வல்லமையாக எடுத்து பயன்படுத்தி வருகிறான். 'பைபிள் ஒரு ஆபாச புத்தகம். இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிக்கவில்லை. அல்லா அவரை எடுத்துக் கொண்டார். நான் போய் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவேன் என்று கூறி அவர் அனுப்பியவர்தான் முகமது நபி. இயேசு இறைவன் அல்ல. அவர் ஒரு இறைத் தூதன் மட்டுமே' என்றெல்லாம் துர் உபதேசம் செய்கின்றனர். சில பலவீனப்பட்ட ஊழியக்காரர்கள், போதகர்களை பிடித்து எடக்கு மடக்காக பைபிள் குறித்து நிறைய கேள்விகளைக் கேட்டு, குழப்பி, அவர்கள் பதில் சொல்ல முடியாமல் திணறுவதை அப்படியே படம் பிடித்து, ஃபேஸ் புக், இன்டர்நெட்டில் போட்டு விடுகின்றனர். இஸ்லாமியர்களும் இரட்சிக்கப்பட வேண்டும். ஒருவரும் கெட்டுப் போவது தேவ சித்தமல்ல. அவர்கள் கேட்கும் கேள்விக்குப் பதில் அளிக்கும் விதமாக **'இஸ்லாமியர்களின் கேள்விகளுக்குப் பதில்'** என்கிற புத்தகம் உங்களுக்கு உதவும்.

## 11. திரித்துவம்

கர்த்தர் ஒருவரா? மூன்று பேரா? பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூன்று நபர்களா? அல்லது ஒருவரா? திரித்துவம் என்கிற வார்த்தையே பைபிளில் எங்குமே இல்லையே. ஒரே குழப்பம். கிறிஸ்தவர்களைக் குழப்பி, அவர்கள் பக்கம் இழுப்பதற்கு இந்த திரித்துவத்தைக் குறித்து இஸ்லாமியர்களும், யகோவா சாட்சிகளும் பலவாறாக கூறி வருகின்றனர். இதுபற்றிய ஒரு தெளிவான விளக்கம் பெற, பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு வரை திரித்துவம் குறித்து கூறப்பட்டுள்ள வசனங்களை அறிந்து கொள்ள **'திரித்துவம்'** என்கிற இந்த சிறிய விளக்க புத்தகத்தைப் படியுங்கள். உங்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.

## 12. ஜெபமே ஜெயம் தரும்

தேசம் சந்திக்கப்படுவதற்கு, தேசத்து ஜனங்கள் அனைவருமே இரட்சிக்கப்பட அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தல் மிக மிக அவசியம். ஆனால் நாம் அறிவிக்கின்ற சுவிசேஷத்தால் மட்டுமே தேசம் சந்திக்கப்படப் போவதில்லை. அதற்கு ஜெபம் மிக மிக முக்கியம். சாதாரண ஜெபம் அல்ல. அழுது கண்ணீர் விட்டு, கதறி கர்ப்ப வேதனையோட ஜெபம் செய்யணும். அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காக பரிதவிக்கணும். திறப்பின் வாசல்ல நிக்கணும். உபவாசித்து போராடி, இடைவிடாமல் ஜெபிக்கணும். நம்முடைய இனத்தார், ஜனத்தார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், உடன் வேலை செய்பவர்கள், அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள், நாம் வாழும் பகுதியில் உள்ள மக்கள், நம்ம ஊர், தாலுகா, மாவட்டம், மாநிலம், நம்ம மொழி பேசுவோர், நம்ம தேசம், அரசு அதிகாரிகள், காவல் துறையினர், ரயில், பஸ், விமான போக்குவரத்துத் துறை ஊழியர்கள், ஆட்சி பீடத்தில் இருக்கும் பிரதம மந்திரி, யூனியன் மினிஸ்டர்ஸ், காபினெட் மினிஸ்டர்ஸ், மாநில கவர்னர்கள், முதல் மந்திரிகள், சட்டசபை உறுப்பினர்கள், மாநில மந்திரிகள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என அனைவருமே இரட்சிக்கப்பட நாம் ஜெபிக்க வேண்டும். **'கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கம்பீரத்தோடே அறுப்பார்கள். ஜெபத்தோடு விதைக்கிறவர்கள், ஜெயத்தோடே அறுப்பார்கள்'** என வேதம் கூறுகிறது.

அப்படி நம்ம தமிழ் நாட்டிலிருந்து பெங்களூர் சென்று அங்கு செட்டில் ஆகி, இரட்சிக்கப்பட்டு ஆண்டவருக்காக ஊதியம் செய்கின்ற பாஸ்டர் என்.ஆர். டேவிட் அவர்கள் தற்போது அவர் வாழும் கர்னாடக மாநிலம் கர்த்தருக்கு சொந்தம் ஆகணும் என்பதற்காக அதே தாகமுள்ள சிலரை கூட்டிச் சேர்த்து 'கல்வாரி ஜெபக்குழு' என்று ஒன்றை ஆரம்பித்து, கர்னாடகாவினுடைய 30 மாவட்டங்களும் இரட்சிக்கப்படணும் என்பதற்காக, அந்த டிஸ்ட்ரிக்கில் உள்ள

ஒரு நகரத்திற்கும் ஒரு டீமோடு சென்று அங்குள்ள திருச்சபை போதகர்கள் அனைவரையும் சந்தித்து, ஒன்று சேர்த்து அந்த மாவட்டத்தின் இரட்சிப்பிற்காக மூன்று நாட்கள் உபவாச ஜெபம் ஏற்பாடு செய்து ஜெபிக்கிறார். இப்படி ஆண்டுக்கு 3, 4 மாவட்டங்களை தேர்வு செய்து ஜெபித்து வருகிறது இந்த ஜெபக்குழு.

இவர்களால் இரட்சிப்பிற்குள் வழிநடத்தப்பட்ட நாலு இராணுவ சகோதரர்கள் நமது தேசத்தின் தொலைதூர வடக்கு, வடகிழக்கு மாநிலங்களில் பணிபுரிந்தாலும் அங்கே அவர்கள் 'இராணுவ சகோதரர்களின் ஜெபக்குழு' ஒன்றை ஆரம்பித்து அங்கே சுவிசேஷத்தை அறிவிப்பதோடு, கர்நாடக மாவட்ட உபவாசக் கூட்டங்களுக்கும் எப்படியாவது வந்து கலந்து கொள்ளுகின்றனர். இந்த ஜெபக்குழுக்களின் ஜெபம், ஆர்வம், செயல்பாடுகள் மற்றவர்களை அனல் மூட்டுவதாக உள்ளது. நமது தமிழ்நாட்டிலும் இதுபோன்ற ஜெபக்குழுக்கள் எழும்ப வேண்டும். நமது தேசத்திலுள்ள ஒவ்வொரு மாநிலங்களில் உள்ள மாவட்டங்களுக்காகவும் ஜெபிப்பதற்கென்று ஜெபக்குழுக்கள் எழும்ப வேண்டும். உபவாசக் கூட்டங்கள் நடைபெற வேண்டும். அந்த மாநிலத்தின் செழிப்பிற்காக, வளமைக்காக, வளர்ச்சிக்காக அந்த மாவட்டம், மாநிலத்திற்கே உயரிய குறிப்பிட்ட பிரச்சினைகளுக்காகவும், அங்கு ஆட்சியில் உள்ள அரசியல் கட்சிக்காகவும், அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகளுக்காகவும் நாம் ஜெபிக்கணும்.

எரிக் என்கிற ஒரு கனடா நாட்டு மிஷனெரி பெங்களூரில் எவ்வித சப்போர்ட்டும் இன்றி தனிப்பட்ட முறையில் கைப்பிரதிகளை கொடுத்து ஊழியம் செய்து வந்தார். அவர் மூலம் ஆண்டவர் பல அற்புதங்களைச் செய்தார். ஒருமுறை சத்ய சாயி பாபாவின் பிறந்த நாள் விழாவிற்கு சென்றார். கர்னாடகா மாநில கவர்னர், முதன் மந்திரி, மற்றும் அநேக மந்திரிகள், அதிகாரிகள் மற்றும் மத்திய அரசு மந்திரிகள் என 5 லட்சம் பேருக்கும் அதிகமானோர் இருந்தனர். அத்தனை

பேரையும் தாண்டி முன்னே போய் அத்தனை பேருக்கும் முன்பாக, "பாபா, நீர் ஒரு கடவுள் அல்ல. நீர் ஒரு சாதாரண மனிதரே. இயேசு ஒருவரே தெய்வம்" என்று உரத்த குரலில் சுவிசேஷத்தை அறிவித்தார். காவல்துறை அவரை அரெஸ்ட் செய்து பாபாவை கொலை செய்ய வந்ததாக பொய் கேஸ் போட்டனர். 3 மாதம் சிறையில் அடைத்து சித்திரவதை எல்லாம் செய்தனர். அவர் சிறைக் கைதிகளுக்கும், அங்குள்ள போலீஸ் அதிகாரிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவித்தார். கொலைக் குற்றத்தை நிரூபிக்க முடியாத நிலையில் அவரை கடைசியில் விடுதலை செய்தனர். கனடாவிற்கே திருப்பிச் செல்லும்படி கூறினர். அவர் கையில் பணம் இல்லாத நிலையில் கவர்மெண்ட்டே அவருக்கு ஃபிளைட் டிக்கெட் எடுத்துக் கொடுத்து, அனுப்பி வைத்தது. எரிக்கின் சாட்சியையும், அவர் செய்த ஊழியத்தில் நடந்த பல அற்புதங்களைப் பற்றியும், **'கர்னாடகாவிற்காகக் கதறி அழும் கல்வாரி ஜெபக்குழு மற்றும் இராணுவ சகோதரர்களின் ஜெபக்குழு'** பற்றிய புத்தகத்தைப் படித்துப் பாருங்கள். இராணுவ சகோதரர்களின் சாட்சிகள் உண்மையிலேயே மெய்சிலிர்க்க வைக்கின்றன.

## 13. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

வார்த்தையாக இருந்து இந்த பிரபஞ்சத்தையும், சகல ஜீவராசிகளையும், மனிதனையும் படைத்த அந்த திரியேக தேவனாகிய கர்த்தர் இயேசு கிறிஸ்துவாக மனித அவதாரம் எடுத்து வந்தது எவ்வளவு உண்மையோ, அதுபோல அவர் மீண்டுமாய் வரப் போகிறதும் சர்வ நிச்சயம். அவருடைய வருகைக்கு முன்பாக என்னவெல்லாம் நடக்கும் என்று வேதத்தில் கூறப்பட்டு இருக்கிறதோ அவைகள் எல்லாம் அப்படியே அட்சரம் பிசகாமல் இன்று ஒவ்வொன்றாய் நடந்து கொண்டு இருக்கிறது. கொலை, கொள்ளை, வெள்ளம், சுனாமி, பூகம்பம், கொடிய நோய்கள், ஜனத்துக்கு விரோதமாய் ஜனங்கள், தேசத்துக்கு விரோதமாய் தேசம், கள்ள தீர்க்கதரிசனம் என்று அனைத்துமே தற்போது இப்பூமியில்

நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, இந்த பூமி அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு இருக்கிறது என்பது உண்மையாக நிறைவேறப் போகிறது என்பதற்கு முன் எச்சரிக்கையாக சூரியனைச் சுற்றி இருக்கிற காந்தப் புயல் பல லட்சம் மின் அழுத்தத்தோடு இந்தப் பூமியைத் தாக்கி சுட்டெரித்து சாம்பலாக்கப் போகிறது என நாசா விஞ்ஞானிகள் கூறுகின்றனர். சூரியனைச் சுற்றி இருக்கிற எரி கற்கள் பூமியில் விழுந்து பலத்த சேதத்தை ஏற்படுத்தப் போகிறது என்று விஞ்ஞானிகள் வயிற்றில் புளியைக் கரைக்கின்றனர்.

டைட்டானிக் கப்பல் பாதுகாப்பான ஒரு சொகுசுக் கப்பல். மிக மிக பாதுகாப்பானது என்றும் கடவுளே நினைத்தாலும் அதை ஒன்றும் செய்ய முடியாது என அந்த கப்பலை உருவாக்கிய இன்ஜினியர்ஸ் சொல்லிக் கொண்டிருந்தனர். உலகத்தில் உள்ள மிகப் பெரிய பணக்காரர்களோடு 1902 ஆம் ஆண்டு தன்னுடைய முதல் கடற் பயணத்தைத் தொடங்கியது. ஒரு பெரிய பனிப் பாறையின் மீது அந்தக் கப்பல் மோதி அந்த பலமான கப்பல் இரண்டாகப் பிளந்தது. அதில் பயணம் செய்த அனைவருமே இறந்தனர். ஒரு 100 - 150 பேர் மாத்திரமே உயிர் தப்பினர். நாமும் இப்போது ஒரு டைட்டானிக்கில்தான் பயணப்பட்டுக் கொண்டு இருக்கிறோம். ஒரு கப்பலில் அல்ல. ஒரு கிரகத்தில் 'பூமி என்கிற பிளாநெட்டில் இருக்கிறோம். இந்த பூமி அழியப் போவது இல்லை என்று இவ்வுலகில் உள்ள அனைவருமே எண்ணிக் கொண்டு மனம் போனபடி வாழ் கின்றனர். நோவா காலத்தில் பாவம் பெருகியது. ஆண்டவர் கோபம் கொண்டு இந்த பூமியை ஜலப்பிரளயத்தினால் அழிப்பேன் என்றார். நோவா அதை அனைவரிடமும் கூறினான். யாருமே நம்பவில்லை. ஒரு பேழையைக் கட்டு என்று கர்த்தர் கூறினார். நோவா கட்டிய பேழையில் நோவாவும் அவன் குடும்பத்தார் மாத்திரம் ஜலப்பிரளயத்தின் போது காப்பாற்றப்பட்டனர். மற்ற அனைவருமே அழிந்தனர்.

இந்த உலகம் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு இருக்கிறது. பைபிளில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையும் அப்படியே நிறைவேறியிருக்கிறது என நிரூபித்து

[illegible]

## [illegible]

[illegible] 30 [illegible] 24 [illegible]

கர்த்தர் நமக்கு ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் இந்த உலகத்தில் உள்ள அனைவருக்குமே சொந்தம். கர்த்தர் தம்மை பைபிளில் மாத்திரம் வெளிப்படுத்தவில்லை. இந்த உலகத்திலுள்ள எல்லா மதங்களின் வேதங்களிலும், வேதாந்தங்களிலும் அவர் நேரடியாகவும், மறைபொருளாகவும், தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். கிறிஸ்தவத்தால் நமது தேசத்தின் எல்லா மதங்களிலேயும் தாக்கங்கள், அதனால் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்து மதத்தில் சித்தர்கள், ஞானிகள், தவசிகள், யோகிகள், ஆழ்வார்கள், சைவக் குறவர்களின் பாடல்களிலேயும், திருக்குறளிலேயும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியே கூறப்பட்டு இருக்கிறது என பல நூல்களில் கூறப்பட்டுள்ளதை இதுவரை பார்த்தோம். இவைகளை எல்லாம் பயன்படுத்தி நம்மைச் சுற்றியுள்ள 80% இந்துக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க நமக்கு ஒரு புதிய பார்வை, அணுகுமுறை தேவை. அதற்காக **'இந்திய ஊழிய உயர்வுக்கு ஒரு புதிய பார்வை'** என்ற புத்தகம் பார்க்க.

தற்போது ஆளும் கட்சியின் ஆதரவோடு சில இந்துத்துவா அமைப்புகள் மத மாற்றத்தை 'கர்வாப்சி' என்று செய்துவிட்டு, நாங்கள் மதமாற்றம் செய்யவில்லை. அவர்கள் விட்டுச் சென்ற வீட்டிற்கே, இந்து மதத்திற்கே 'வீடு திரும்புகின்றனர்' என காதில் பூ சுற்றுகின்றனர். அவர்கள் செய்வது எவ்வளவு பயித்திரக்காரத்தனம் என்று அவர்களுக்கு புரியும் வகையில் பதில் கொடுக்க, அவர்களை எதிர் கொள்ள, அவர்களின் இந்த முயற்சிகளைத் தடுக்க கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருக்கும் நல்ல ஞானம் வேண்டும். பல சரித்திர உண்மைகள் ஆதாரப்பூர்வமாகத் தெரிய வேண்டும். அதைப் புரிய வைக்கும் ஒரு நூலே **'கர்வாப்சி' - மதமாற்றம் எனும் மாயை'** என்று ஒரு தேவ மனிதர் எழுதிய புத்தகம். அதை வாங்கிப் படித்துப் பாருங்கள். பல உண்மைகள் உங்களுக்குப் புரியும். **'தேசம் சந்திக்கப்படணும் கர்த்தாவே', 'முக்திக்கு வழி கிறிஸ்தவமே'** என்கிற VCD களும் இருக்கின்றன. வாங்கிப் பார்த்து மற்றவர்களுக்கும் கொடுங்கள்.

## 15. 666 - எச்சரிக்கை

அந்திக் கிறிஸ்துவிவன் வருகைக்கு ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்று அவன் மூலம் நடக்கவிருக்கும் உபத்திரவக்காலம், மகா உபத்திரவ காலத்திற்காக உலகில் உள்ள அனைத்து தேசங்களும் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. இன்று உலகத்தின் எந்த மூலையில் இருந்து கொண்டும் நம் தேசத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிக்க ஏதுவாக சேட்டிலைட்டுகள் இயங்குகின்றன. இன்டர்நெட்டில் உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களோடு ஒரு நிமிடத்தில் நாம் தொடர்பு கொள்ள முடியும். யாருக்கும் தெரியாமல் எங்கே இருந்தும் எதையும் போட்டோ எடுத்துவிட முடியும். யூரோ கரென்சி என்று பல தேசங் களுக்கும் ஒரே கரன்சி என உருவாகி வருகிறது.

அடுத்து இப்போது 'பயோசிப் என்று ஒரு அரிசி அளவே உள்ள ஒரு மென் பொருளை (பயோசிப்) வெளிநாடுகளில் உள்ள அனைவருக்கும், பிறந்த குழந்தைக்கும் கூட போட ஆரம்பித்து விட்டனர். அந்த மென்பொருளில் ஒவ்வொரு வருக்கும் 16 டிஜிட் எண் ஒன்று கொடுக்கப்படும். அரிசி அளவே உள்ள அந்த மென்பொருளை நெற்றியிலோ அல்லது வலது கையிலோ ஒரு சிறிய சர்ஜெரி மூலமாக பதித்து விடுவார்கள். இனி அந்த மென்பொருள் இல்லாமல் நாம் எதையுமே வாங்க முடியாது, விற்க முடியாது என்கிற அளவுக்கு அது அடையாள அட்டையாக பயன்படுத்தப்படும்.

இதனால் கவர்மெண்ட்டுக்கு நல்ல லாபம். கவர்மெண்டின் நாலெட்ஜ் இல்லாமல் நீங்கள் எதையும் செய்ய முடியாது. எங்கு சென்றாலும் நாம் இருக்கும் இடத்தை ஒரு நொடியில் கண்டு கொள்ள முடியும். இந்த மென்பொருளை நமது தேசத்திலும் அமுல்படுத்த அனைத்து ஏற்பாடுகளும் நடந்து கொண்டி ருக்கிறது. 2015 கடைசிக்குள் அல்லது அடுத்த ஆண்டுக்குள் அது கண்டிப்பாக நடைமுறைக்கு வந்துவிடும். சோதனையாக இந்த மென்பொருள் மிருகங்களின் உடலில் போட்டு

எக்ஸ்பரிமெண்ட் செய்தனர். 80, 100 ஆண்டுகள் வாழ வேண்டிய மிருகங்கள், 25, 30 ஆண்டுகளிலேயே செத்து விழுந்தன.

இந்த மென்பொருள் எல்லாம் நம் பூமியைச் சுற்றியுள்ள சேட்டிலைட்டுகளோடு இணைக்கப்படும். சூரியனைச் சுற்றியிருக்கிற லட்சக்கணக்கான எரிகற்கள் பூமியின் மீது விழும் அபாயம் உள்ளது என நாசா விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அப்படி ஒரு இராட்சச கல் வட சைனாவில் விழுந்து அங்கே ஒரு மிகப் பெரிய பள்ளம் ஏற்பட்டது என 2014 பிப்ரவரியில் ஹிந்து நாளிதழ் ஒரு செய்தியை வெளியிட்டது. இந்த எரி கற்கள் பூமியின் மீது விழும்போது பூமியைச் சுற்றியுள்ள சாட்டிலைட்டுகள் மீதும் விழும். அப்பொழுது அது சுக்கு நூறாக நொறுங்கும். அதோடு இணைக்கப்பட்ட மென்பொருளும் (பயோசிப்) வெடித்துச் சிதறும். மனிதன் சாவான்.

அதுமட்டுமல்ல, நம்ம ஆட்கள் கம்ப்யூட்டரில் கில்லாடிகள். ஒருவருக்கு கொடுக்கப்பட்டுள்ள அந்த 16 டிஜிட் நம்பரைத் தெரிந்து கொண்டு விட்டால், வீட்டின் ஒரு மூலையில் கம்ப்யூட்டர் முன் உட்கார்ந்து கொண்டு நெட் கனெக்ஷன் கொடுத்து நாலு வீடு தள்ளி ஒரு பெண் பாத்ரூமில் எப்படி குளித்துக் கொண்டு இருக்கிறாள் என பார்த்துவிட முடியும். புதிதாக திருமணம் ஆன தம்பதிகள் பெட்ரூமில் எப்படி இருக்கின்றனர் என்பதையும் பார்த்துவிட முடியும். நம்மோட அந்தரங்கமெல்லாம் வெளியரங்கமாகி விடும். ஆகவே எக்காரணம் கொண்டும் இந்த பயோசிப்பை ஒருவரும் போட்டுக் கொள்ளக் கூடாது என்பதை வேத ஆதாரத்தோடு எடுத்துக் கூறும் **'666 எச்சரிக்கை'** என்கிற நூலையும் படித்துப் பாருங்கள்.

## வாசகர்களின் கவனத்திற்கு

நான் எழுதிய இந்த 52 புத்தகங்கள், 5 விசிடிகளையும் மொத்தமாக ஒரு செட்டாக வாங்க வேண்டும் என்றால் 'ஃபுல் செட் புக்' அனுப்புங்கள் என்று எழுதி 50 புத்தகம் + 5 விசிடிக்காக ரூ.550க்கு பதிலாக ரூ.540ம், தபால் செலவு 50ம் சேர்த்து ரூ.590/- M.O. அனுப்புங்கள். அல்லது என்னுடைய பேங்க் அக்கவுண்ட்டுக்கு செக் மூலமாக இந்தப் பணத்தை செலுத்தி விட்டு எனக்கு டெலிபோன் செய்யுங்கள். என் அக்கவுண்ட்டில் செக் மூலமாகத்தான் பணம் செலுத்த வேண்டும். செக் இல்லாமல் பணம் மூலமாக செலுத்தினால் 'கேஷ் ஹேண்டலிங் சார்ஜ்' என்று என்னிடம் ரூ.25 சார்ஜ் செய்கின்றனர்.

பேங்க் அக்கவுண்ட் விபரம்

**எஸ்.தாயப்பன்**

பஞ்சாப் நேஷனல் பேங்க், சேலையூர் பிராஞ்ச்,

சென்னை-600 073.

A/C No. 3858000 100055107

IFS Code No: PUNB0385800

தகவல் கூற வேண்டிய கைபேசி எண்:

கார்த்திக் - 9380853894, 044 - 43552999

# ஆசிரியர் குறித்து

துடிப்பும், வேகமும், விவேகமும், நகைச்சுவையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 73 வயது என்று நம்ப மாட்டார்கள். இந்திய விமானப் படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 8 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும், பின்னர் ஃபென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்சுவை நிகழ்ச்சிகள், பாட்டு, டி.வி சீரியல்கள் என கலைத் துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன் முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப்படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர்.

இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர பக்தி வைராக்கியமுள்ள இந்து. இவரும் இவரது குடும்பத்தாரும் எப்படி மெய்யான பரம்பொருளைத் தேடிக் கண்டு கொண்டார்கள் என்பதையும், அந்த உண்மையான சர்வேஷ்வரன் இவர்கள் வாழ்க்கையில் செய்த எண்ணி மாளாத அற்புதங்களையும், அதிசயங்களையும், நன்மைகளையும் இவர் பல பொதுக் கூட்டங்களிலேயும், ஜனக் கூடுகைகளிலேயும் கூறி வருகிறார். இவர் எழுதிய சாட்சிப் புத்தகமும், மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, படிக்கின்றவர்களை, கேட்கின்றவர்களை பண்படுத்துவதாக, புடமிடுவதாக, தாங்கள் இதுவரை வாழ்ந்த வாழ்க்கையை திரும்பிப் பார்த்து சீரமைக்கத் தூண்டுவதாக இருப்பதாக அனைவருமே கூறுகின்றனர். இறைவன் இவரையும், இவரின் முழுக் குடும்பத்தையும் ஜனங்களை நல்வழிப்படுத்துவதற்காக தெரிந்து கொண்டு இருக்கிறார் என்றால் அது மிகையல்ல.

Sundar Prints 9840199777